
இன்பத்தை அள்ளித்தரும்
இந்துமதம்
8
தமிழறிஞர்
கே. வி. குணசேகரம்

# இன்பத்தை அள்ளித்தரும் இந்து மதம்.

பாகம் - 8

கே.வி. குணசேகரம்
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
நல்லூர்.

# என்னுரை

இந்துசமய நூல்கள் பலவற்றைக் கற்றதால் அதன் உட்பொருளை உணர்ந்து அவற்றை உங்களின் பார்வைக்கு வைக்கிறேன். இவை யாவும் கற்றதாலும், அனுபவத்தாலும் ஏற்பட்டவை.

இந்நூலின் எழுத்துப்பிழைகளை நீக்கிச் சீர்செய்து தந்த ஆசிரியை செல்வி இறைமகள் பரநிருபசிங்கம் அவர்களுக்கும், திரு. வா. ஜெயரத்தினம் அவர்களுக்கும், கணனியில் வடிவமைத்துத் தந்த செல்வி. க. தேனமிர்தம் அவர்களுக்கும், இந்நூலைப் பதிப்பிக்கும் லங்கா பதிப்பகத்தினருக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன். மீண்டும் சந்திப்போம்.

கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

அன்புடன்
கே. வி. குணசேகரம்.
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
நல்லூர்.

வாழ்க்கையை அதன் தத்துவத்தைப் புரிந்து கொண்டவர்களால் மட்டுமே அனுபவிக்க முடியும்.

வாழ்க்கைக்கு இன்றியமையாதது மனோதிடம். பலம் மிக்க மனமுடையவனால் தான் வாழ்க்கைக்குத் தேவையான வற்றைத் தேட முடியும். தன்னிடம் உள்ள பலத்தைப் பண்புடன் விருத்தி செய்தல் வேண்டும். இந்துமதம்; ‘‘பலம் தான் சமயவாழ்வு’’ என்கிறது. ‘‘பலவீனம் பாவத்தைச் சேர்க்கிறது’’ என்கிறது.

பலவானானவன் தன்நம்பிக்கை உடையவனாக இருப்பான். இறைவனிடத்தில் அளவுக்கதிகமான நம்பிக்கை வைத்திருப்பவன், குடும்பத்தை நேசிப்பவன், அயலவர்கள் மீது அன்பு வைத்திருப்பவன் மக்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வான். அவன் மிகுந்த தன்நம்பிக்கையுடன் வாழ்வதால் தன்னை இழிவானவனாக, செயலற்றவனாக நினைக்க மாட்டான்.

இவற்றைவிடத் தோல்விகளை மனத்திடத்துடன் தாங்கி, அவற்றை வெற்றிகளாக்க முயன்று வெற்றியும் அடைவான். தோற்றுவிட்டேனே என்று கவலைகொண்டு அதைப் பற்றி இடையறாது சிந்தித்துக் கவலைப்பட்டுக் கொண்டிருப்பவர்களால் வாழ்வில் வெற்றியடைய முடியாது. வெற்றியடைபவன் அடுத்த முயற்சியைத் தொடங்கி அதையும் வெற்றியாக்க நினைப்பான்.

வெற்றியடைய வேண்டுமானால் முதலில் பயத்தை நீக்குதல் வேண்டும். ‘‘தற்செயலாகத் தோல்வியேற்பட்டுவிட்டால் என்ன செய்வது? என்னிடமுள்ள சிறிய முதலும் அழிந்துவிடுமே’’ என்று நினைப்பவன் தொழிலைத் தன்வாழ்வில் தொடங்க மாட்டான்.

பலத்துடன் முயன்றால், முயலும் காரியம் அனைத்திலும் வெற்றியடையலாம் என்று நினைப்பவன் தன்நம்பிக்கையுடன் தொழிலைத் தொடங்குகிறான்; விடாமுயற்சி செய்கிறான். 'நான் கட்டாயம் வெற்றியடைவேன்' என்ற எண்ணம் அவனது மனதில் இருப்பதால் அவன் தோல்வியடைய வாய்ப்பு இருக்காது.

ஒவ்வொரு மனிதருள்ளும் கணக்கிலடங்காத ஆற்றல்கள் பொதிந்து கிடக்கின்றன. 'மனிதனின் நியாய பூர்வமான எண்ணங்களுக்கு எப்போதும் கடவுள் உதவி செய்வார்' என்று இந்து சமயங்கள் கூறுகின்றன. மனிதன் இறைவனின் ஆளுகைக்கு உட்பட்டவன்; இறைவனின் அன்புக்குப்பட்டவன். 'அன்புடன் வேண்டுவோர்க்கு இறைவன் அளவில்லாத செல்வத்தை அள்ளிக் கொடுப்பவன்' என்று நம்புபவனின் ஆற்றல் காட்டாறு போலப் பெருகும்.

மனிதனின் ஆற்றல் வளம்பெறும் போது அவன் ஒழுக்கத்தை உயிரிலும் மேலாகக் கருதுதல் வேண்டும். ஒழுக்கமின்மை சிலசமயம் பெருவெற்றியைத் தந்தாலும், அது வந்த வேகத்தில் அழிந்துவிடும் என்பதை உணர்பவன் சுயநலத்தை விட்டுவிடுவான். சுயநலமில்லாதவனின் மனதில் தீய எண்ணங்கள் இருக்கமாட்டாது.

134. மறப்பினும் ஒத்துக் கொளலாகும்; பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்.

பார்ப்பான் தான் கற்ற மறைப்பொருளை மறந்தால் ஓதிக் கற்றுக்கொள்ள முடியும். ஆனால் அவன் தனது குடிக்குரிய ஒழுக்கத்தை மறந்தால், அக்குடி கெடும்.

139. ஒழுக்க முடையவர்க்கு ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயால் சொலல்.

தீய சொற்களைத் தவறியும் தம் வாயால் ஒழுக்கமுடையவர்கள் சொல்லமாட்டார்கள்.

ஒருவன் தனது செல்வம் பெருகவேண்டும் என்று விரும்பினால், அவன் பிறரின் பொருளை மனதால் கூட விரும்பாதவனாக இருத்தல் வேண்டும்.

248. பொருள்அற்றார் பூப்பர் ஒருகால்; அருள்அற்றார்
அற்றார்மற்று ஆதல் அரிது.

பொருளற்றவர்கள் பொருளைத் தேடி வளமாக வாழும் காலம் உண்டாகும். ஆனால் அருளில்லாதவர்கள் ஒரு காலத்திலும் சிறந்து விளங்க மாட்டார்கள்.

இவ்வாறு திருவள்ளுவர் கூறுகிறார். சமூகத்தைப் பார்த்தால் பத்துப் பதினைந்து வருடங்களுக்கு முன்பு ஒரு நேர உணவுக்காக அல்லற்பட்ட பலர் இன்று கோடீஸ்வரர்களாக மாறியிருக்கின்றனர்.

பொருள் வரும்போது அருள் மறையப்பார்க்கும். அதனால் மனதுள் பல தீய எண்ணங்கள் உருவாகும். தீய எண்ணங்கள் அடுத்தவனைக் கெடுக்கச் சொல்லும்; அடுத்தவனின் பொருளைக் கவரச் சொல்லும். இந்த நிலை வளர்ந்தால் உள்ள பொருளும் அழிந்து போய்விடும்.

வர்த்தகர்களில் அனேகர் பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது தமக்கு இலாபம் கிடைக்க வேண்டும் என்பதற்காக விலையைக் குறைத்துக் கொள்வனவு செய்வார்கள். அதுபோல பொருட்களை விற்பனை செய்யும் போது விலையைக் கூட்டி விற்பனை செய்வார்கள்.

வணிகர்கள் எப்படி வியாபாரம் செய்ய வேண்டும் என்று வள்ளுவர் கூறுகிறார்.

120. வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோல் செயின்.

வாணிகம் செய்வோன் வாணிகம் சிறப்படைய வேண்டுமானால், அவன் பிறரின் பொருளைத் தன் பொருளாகக் கருதுதல் வேண்டும்.

ஒரு மனிதனின் ஒழுக்கத்தைப் பற்றிக் குடிமை என்ற அதிகாரத்தில் வள்ளுவர் மிகவும் சிறப்பாகக் கூறுகிறார்.

குடிமை என்பது ஒரு குடும்பத்தின் மேலான பண்புகளை விளக்குவதாகும். பலர் குடிமை என்றதும் சமூகத்தில் வழக்கி - லுள்ள சாதியமைப்பைப் பற்றித்தான் கூறுவார்கள்.

சாதியைப் பற்றி வேதம் கூறவில்லை. பிராமணர்கள், சத்திரியர்கள், வைசீகர்கள், சூத்திரர்கள் என்றே மக்களை நான்கு பிரிவுகளாக வேதம் வகுத்துள்ளது.

இவை மக்கள் ஒழுங்காக வாழ வழிவகுக்கும் ஒரு கட்டமைப்பாகும்.

பிராமணர்கள் வேதமோதுவார்கள்; அரசர்கள் மக்களை நீதியான முறையில் வழிநடத்துவார்கள்; வைசிகர்கள் மக்களுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் விற்பனை செய்வார்கள், மக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களைக் கொள்வனவு செய்வார்கள். சூத்திரர்கள் மற்ற மூன்று வர்ணத்தினரும் ஏவும் வேலைகளைச் செய்வார்கள்.

இப்பிரிப்பு கல்வியையும் வீரத்தையும் கொண்டே பிரிக்கப்பட்டது. வேதங்களையும், உபநிடதங்களையும் இந்து சாஸ்த்திரங்களையும் கற்றோர் பிராமணர்கள். இவர்களிடம் தான் அரசர்களும் கல்வி கற்றனர். வேதத்தில் ஒரு குடும்பத்தில் ஒருவன் வைத்தியனாகவும், இன்னொருவன் கூலிக்காரனாகவும் இருந்திருக்கிறான்.

சாதாரண மக்கள் பலர் கல்வி கற்று அரசர்களின் குருவாக இருந்துள்ளனர்.

வீரன் ஒருவன் படை திரட்டிப் பல நாடுகளை வென்று நாட்டை நீதிமுறை தவறாது ஆண்டதாக எமது மூதாதையர் நூல்களில் குறிப்பிட்டுள்ளனர்.

குடிமை என்பது ஒரு குடும்பத்தின் நற்பண்புகளையே குறிப்பதாகத் திருக்குறள் கூறுகிறது. சங்ககாலத்தில் எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும், திருக்குறளும், மணிமேகலையும், சிலப்பதிகாரமும் பாடப்பெற்றன. சங்க காலத்தில் பாடப்பெற்ற அகநானூற்றில் திருமணம் பற்றிய செய்திகள் உண்டு. அச்செய்திகளில் பிராமணர்கள் கலந்து கொண்டமைக்கான ஆதாரங்கள் எவையும் இல்லை. ஆனால் சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் திருமணத்தின் போது பிராமணர்கள் வேதமோதியதற்கான சான்றுகள் உண்டு.

ஆரியர்களின் வருகைக்குப் பின்பு தான் தமிழர்களின் கலாச்சாரத்துள் ஆரிய சலாச்சாரம் புகுந்தது. ஆரியர்கள் தான் நான்கு வர்ணங்களைப் புகுத்தினர். அதற்கு முன்பு மக்கள் சாதிபேதமின்றி வாழ்ந்ததை நாம் திருக்குறலிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது. திருக்குறளில் உள்ள 1330 குறள்களுள் பலவும் ஒழுக்கத்தையே வற்புறுத்துகின்றன. திருக்குறள் கூறும் மனிதமேம்பாடுகள் யாவும் ஒழுக்கமுடையவர்களைப் பற்றியதே. சாதியைப் பற்றியதல்ல என்பதைப் பிராமணர்களுக்குக் கூறும் ஒழுக்க விதிகளிலிருந்து நாம் அறிந்துகொள்ள முடியும்.

131. ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

ஒழுக்கம் மேன்மையைத் தருவதால், ஒழுக்கத்தை உயிரிலும் மேலானதாகப் போற்ற வேண்டும்.

133. ஒழுக்கம் உடைமை குடிமை; இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்.

குடும்பத்தின் உயர்வும் தாழ்வும் ஒழுக்கத்தில் தங்கியுள்ளது. ஒழுக்கமுடையவனாக வாழுதல் உயர்ந்த குடிமகனின் தன்மை. ஒழுக்கம் தவறி வாழ்தல் ஓர் இழிந்த குடிமகனின் தன்மை.

உயர்ந்த குடி என்பது ஒழுக்கத்தால் கணிப்பிடப்படுவதே தவிரப் பிறப்பால் கணிப்பிடப்படுவதில்லை. ஒருவனது நடத்தைகள் தான் அவனை உயர்ந்த குடிமகனாக்குவது.

953. நகைஈகை இன்சொல் இகழாமை நான்கும்
வகைஎன்ப வாய்மைக் குடிக்கு.

உண்மையான உயர் குடியில் பிறந்தவர்களுக்கு முகமலர்ச்சி, கொடுத்து உதவும் தன்மை, இனிய சொல், பிறரை இகழ்ந்து கூறாமை ஆகிய நான்கு பண்புகளும் இயல்பாகவே இருக்கும்.

954. அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர்.

பல கோடி ரூபா மதிப்புள்ள பொருள்களைக் கொடுத்தாலும் உயர் குடியில் பிறந்தவர் தம் குடியின் சிறப்புக் குன்றுவதற்குக் காரணமான செயல்களைச் செய்யமாட்டார்கள்.

959. நிலத்தில் கிடந்தமை கால்காட்டும்; காட்டும்
குலத்தில் பிறந்தார்வாய்ச சொல்.

நிலம் எத்தன்மையது என்பதை அதில் முளைத்த முளை காட்டும். அது போல ஒருவனது வாய்ச் சொல் அவன் எக் குலத்தவன் என்பதைக் காட்டி விடும்.

ஒருவன் ஒழுக்கம் கெடக் காரணமாக இருப்பது ஆசையும் அவாவும்.

நிலையில்லாத பொருட்களை நிலையானது என்று எண்ணுவதால் ஆசை உண்டாகும். பின் அது படிப்படியாக அதிகரித்து அவாவாகும்.

அவாக்கொண்டவர்கள் உலகில் உள்ள பொருட்கள் யாவும் தன்வசமாகவேண்டும் என்று நினைப்பார்கள்.

அடுத்தவனுடைய மனைவி மிகவும் அழகாக இருந்தால் அவளையும் அனுபவித்துப் பார்க்க வேண்டும் என்று எண்ணுவார்கள்.

உலகில் நிலையான பொருள் கடவுள் ஒருவர் தான். அந்த உண்மையைப் புரிந்து கொள்பவனின் ஆத்மா கடவுளின் அடியைச் சேர்ந்து அவருடன் கலந்திருக்கும். இந்த உண்மையை உணர்ந்தவர்கள் மட்டும் தான் தம் வாழ்நாளை இன்பமுள்ளதாக்கிக் கொள்வார்கள்.

உடல் அழகைவிட உள்ளத்தின் அழகு மேலானது என்று தெரிந்து கொண்டவர்கள் நல்ல குடும்பமாகப் பார்த்துப் பெண்ணெடுப்பார்கள். இன்று பலர் தொழிலுக்காகப் பல இடங்களுக்கும் செல்லவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. யாரென அறியாத ஆணைப் பெண்ணும், பெண்ணை ஆணும் விரும்புகிறார்கள். இது இயற்கையாக நடைபெறுவது. காதலிப்பவர்கள் இருவரும் கற்றவர்கள்.

காதல் உண்டாகுமுன் பெண் ஆணினதும், ஆண் பெண்ணினதும் குடும்ப நிலையை உணர்ந்துகொள்ள வேண்டும். அதன் பின்பு ஒருவரைப் பற்றி ஒருவர் அறிந்து கொள்ளல் வேண்டும். இப்படி அறிந்து கொள்ளாது உடல் கவர்ச்சியைக் கண்டு மயங்குபவர்கள் வாழ்க்கையில் நிம்மதியைப் பெறமாட்டார்கள்.

“இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை” என்றொரு புலவர் பாடியுள்ளார். நற்குணவதியான பெண்ணொருத்தி மனைவியாக வாய்த்தால் இல்லை என்று சொல்வதற்கு எதுவும் இல்லை என்றும், இல்லத்திற்குரியவள் உள்ளத்தில் இருந்தால் இல்லாதது எதுவும் இல்லை என்றும் கொள்ளலாம்.

பலர் அழகுதான் சொர்க்கம் என்று நினைக்கிறார்கள். அழகு ஒரு கணத்திலும் அழியும் தன்மை வாய்ந்தது.

திருமணமான ஒருவன் ஒரு தாசியைக் கண்டு அவளின் அழகில் மயங்கினான். அவளை அடையவேண்டும் என்ற ஆவலுடன் அவளின் வீட்டுக்குச் சென்றான். அங்கே அந்த ஊரில் உள்ள பெரும் பணக்காரன் ஒருவன் இருந்தான். அவன் இவனைப் பார்த்து, “ஏன் இங்கு வந்தாய்?” என்று கேட்டான்.

உடனே அவனால் பதில் கூறமுடியவில்லை. அப்போது அந்தத் தாசி வெளியே வந்தாள். அவளது அழகு அவனைக் கொள்ளை கொண்டது. அவளது முகத்தைப் பார்த்தான். அது பூரண சந்திரனை விட ஒளி பெருந்தியதாக இருந்தது. உதட்டைப் பார்த்தான். சிவந்த உதட்டின் மீது பூசப்பட்டிருந்த சாயத்தின் பளபளப்பு அவனது இதயத்தைக் கசக்கியது. இடையைப் பார்த்தான். காவியங்கள் நூலிடை என்று இவளது இடையைப் பார்த்துத்தான் சொல்லினவோ என்ற ஐயம் அவனது மனதில் எழுந்தது.

“உனக்கு என்ன வேண்டும்?” அவள் கேட்டாள்.

குரலோசையால் சற்றுத் தளம்பிய அவன்; “எனக்கு ஏதாவது வேலை வேண்டும்” என்று கேட்டான்.

அவளின் அருகில் இருந்த பணக்காரன்; ‘‘வீட்டு வேலைகள் செய்ய ஆள் தேவை என்று சொன்னாயே வைத்துக் கொள்’’ என்றான்.

அவன் வேலைக்குச் சேர்ந்தான். தினமும் அவளைப் பல தடவைகள் பார்ப்பதால் அவனது உள்ளம் குளிர்ந்தது.

அங்கு தினமும் பலர் வருவார்கள். அவர்கலெல்லோரும் பெரும் பெரும் பணக்காரர்கள்.

ஆறு மாதங்கள் கழிந்தன. அவன் வீட்டிற்குக் கூடச் செல்லாது அத்தாசி வீட்டிலேயே இருந்தான்.

சில நாட்களாக அவளைக் காணவில்லை. அவன், அவள் எங்கே சென்றிருப்பாளென நினைத்துக் கவலைப்பட்டான். அவள் இல்லாததால் அங்கு எவரும் வருவதில்லை.

ஒரு நாள் ஒரு பெண் வீட்டுள் இருந்து வெளியே வந்தாள். அவளைப் பார்க்கப் பயங்கரமாக இருந்தது. அவளது முகமெங்கும் கறுப்புப் புள்ளிகள்.

‘‘யார் நீங்கள்? என்ன வேண்டும்?’’ என்று கேட்டான்.

‘‘நான் தான் சித்திராங்கி’’ என்றாள் அவள்.

‘‘சித்திராங்கியா....? முன்பு கொட்டிக்கிடந்த அழகு எங்கே..? தங்கப் பதுமை போல இருந்த அவள் பேயைப் போலல்லவா இருக்கிறாள்’’ என்று நினைத்தான்.

‘‘அழகு என்பது மாயை. எனக்கு அம்மை நோய் வந்துவிட்டது. உடல் எங்கும் தழும்புகள் வந்துவிட்டன. நான் அழகாக இருக்கும் போது வந்தவர்களெல்லோரும் எனது அழகு கெட்ட பின்பு வருவதில்லை. நீயாவது என்னுடன் இருந்து

எனக்கு உதவி செய். தேவையான பணம் உனக்குத் தருகிறேன்’’ என்றாள்.

அவனுக்குத் தலை சுற்றியது. அவள் உள்ளே சென்றதும், அவன் அவளுக்குச் சொல்லாமல் புறப்பட்டான்.

பெரும் பதவியில் உள்ள ஒருவர் எமது ஊரில் இருந்தார். அவரிடம் உதவி கோரி ஊரில் உள்ள பலர் செல்வார்கள். அவர் யாருக்கும் உதவி செய்யமாட்டார். உதவி செய்யாமல் விட்டாலும் இன்சொல்லாவது பேசமாட்டார். வள்ளுவர் ஒருவன் கேட்கும் பொருட்களைக் கொடுக்க முடியாவிட்டாலும் அவனுடன் இனிமையாகப் பேசினாலே அவன் மகிழ்வான் என்று கூறுகிறார்.

92. அகன்அமர்ந்து ஈதலின் நன்றே முகன்அமர்ந்து
இன்சொலன் ஆகப் பெறின்.

மனம் மகிழ்ந்து பொருள் கொடுப்பதைவிட முகமகிழ்ச்சியோடு இனிமையாகப் பேசுவதே நன்று.

யாரையும் அவர் மதிக்கமாட்டார். எல்லோரையும் எடுத்தெறிந்து பேசுவார். அவருக்கு நண்பர்கள் மிகமிகக் குறைவு. அத்துடன் அவரது நண்பர்கள் வேலை செய்யும் ஊழியர்களையும், அதிகாரிகளையும் பற்றிக் குறை கூறுவார்கள். அதை அவர் நம்பிவிடுவார்.

சட்ட திட்டங்கள் யாவற்றையும் மீறி அவர் தனது நண்பருக்குப் பெரியதொரு பதவி கொடுத்தார்.

சிலகாலத்தின் பின் அவர் இளைப்பாறிவிட்டார். ஒரு நாள் அவர் வீதியால் செல்லும் போது விபத்துக்குள்ளாகி விட்டார். யாரோ தூக்கிச் சென்று வைத்தியசாலையில் சேர்த்தனர். இரண்டு மாதகாலம் அவர் வைத்தியசாலையில்

தங்கிச் சிகிச்சை பெற்றார். அவரைப் பார்க்க அவரது மனைவியைத் தவிர வேறு யாரும் செல்லவில்லை. அவர் தான் முன்பு உதவி செய்தவர்களுக்குச் சொல்லியனுப்பினார். யாரும் வந்து அவரைப் பார்க்கவில்லை. நல்லவர்களுக்குச் செய்யும் உதவிகள் தான் திரும்பவும் வரும். தீயவர்கள் தமக்குத் தேவையானவற்றைப் பெற்றதும் உதவி செய்தவரை மறந்து விடுவார்கள். இதை வள்ளுவர் பின்வருமாறு கூறுகிறார்.

799. கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடும்காலை
உள்ளினும் உள்ளம் சுடும்.

துன்பம் வந்த போது விட்டுப் பிரிபவரின் நட்பை இறக்கும் போது நினைத்தாலும் நினைத்த உள்ளத்தைச் சுடும்.

812. உறின்நட்டு அறின்ஒருஉம் ஒப்பிலார் கேண்மை
பெறினும் இழப்பினும் என்?

தமக்குத் தேவையுள்ள போது நட்புப் பூண்டு, பயன் இல்லாத போது நீங்கிச் செல்லும் தகுதியற்றவரின் நட்பைப் பெற்றாலென்ன? இழந்தாலென்ன?

813. உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது
கொள்வாரும் கள்வரும் நேர்.

கிடைக்கப் போகும் பயனை அளந்து பார்க்கும் நண்பரும், அன்பை நினைக்காமல் பொருளை விரும்பும் விலை மாதரும், திருடர்களும் சமமானவர் ஆவார்.

இது போன்றது தான் பணமும். அது தேடிய வழியில் சென்று விடும். அறநெறிகளுக்கு அமையப் பணத்தைத் தேடினால் அது அறநெறிகளுக்குச் செலவாகும். அறநெறிகளுக்குச் செலவாகும் பணம் கிணற்று நீரை இறைக்க இறைக்க அது ஊறுவது போலப் பணத்தைச் செலவு செய்யச் செய்ய அதைச் செலவு செய்தவனை வந்தடையும்.

களவெடுத்துச் சம்பாதித்தவனின் சொத்து இன்னொருவனால் களவெடுக்கப்படும். இல்லாவிட்டால் இயற்கை அனர்த்தங்களால் அழிவுறும்.

பட்டணத்தில் எமது ஊரவர் ஒருவர் பெரிய வர்த்தக நிலையம் ஒன்றை நடத்தி வந்தார். மிகவும் நேர்மையானவர் அவர். அவர் தனது பொருட்களின் மீது கவனம் செலுத்துவதை விடப் பிறரின் பொருளில் அதிக கவனம் செலுத்துவார்.

ஒரு நாள் மின் ஒழுக்குக் காரணமாகப் பல வர்த்தக நிலையங்கள் எரிந்து சாம்பராயின. தீயணைப்புப் படையினரும் மக்களும் ஊரவரின் வர்த்தக நிலையத்திற்குத் தீ பரவா வண்ணம் செயற்பட்டுக் கொண்டிருந்தனர். பல வர்த்தக நிலையங்கள் முற்றாக எரிந்து சாம்பரான போதும் எமது ஊரவரின் வர்த்தக நிலையம் எதுவித சேதமுமின்றித் தப்பியது.

மக்கள் அதைப் பாதுகாத்தனர். தீயணைப்புப் படை வீரர்களும் அதைப் பாதுகாத்தனர். இது இறைவனின் திருவிளையாடல். நல்லபடி வாழ்பவனுக்குத் துன்பங்கள் ஏற்பட இறைவன் விடமாட்டான். அவனுக்குத் துன்பம் ஏற்பட்டால் அது சமூகத்தைப் பாதிக்கும்; பெரியவர்களின் வாக்கைப் பொய்யாக்கும்; இறைவனின் இருப்பை நிர்மூலமாக்கும். இதனால் நல்லவர்களுக்குத் துன்பமமுண்டாகும் போது இறைவன் மற்றவர்களை உதவி செய்ய அனுப்புவான்.

அழகு நிலையில்லாதது; அதிகாரம் நிலையில்லாதது; பொருட்கள் நிலையில்லாதவை என்பதை உணர்ந்தவன் வாழ்க்கையில் வரும் துன்பங்களை இறைவன் நீக்குவார் என்ற நம்பிக்கையுடன் வாழ்வான். அவனது வாழ்வு சிறக்கக் கடவுள் உதவுவார்.

“உன்னை நீ அறிவாய்” என்பது உபநிடத வாக்கியம்.

ஒவ்வொருவரும் தம்மைத் தாமறிவார்கள்.

ஒவ்வொருவரும் செய்யும் செயல்கள் நல்லவையா கெட்டவையா என்று செய்பவனுக்கு மட்டும் தான் தெரியும்.

ஒரு திருடன் ஒரு நாள் இரவு ஒரு வியாபார நிலையத்தை உடைத்துத் திருடினான்.

மறுநாள் வர்த்தக நிலைய உரிமையாளன் காவல் துறையில் புகாரிட்டார்.

காவல்துறையினர் இன்னொருவனைத் திருடனென நினைத்துக் கைது செய்தனர்.

காவல்துறையினர் மீண்டும் மீண்டும் அவனைத் தாக்கினர்.

அவன் துன்பத்தைத் தாங்கிக்கொள்ள முடியாது ஒப்புக்கொண்டான்.

அதனால் அவனுக்கு ஓராண்டு சிறைத்தண்டனை கிடைத்தது.

இத்தண்டனை பொருத்தமற்றது என்ற எண்ணம் தோன்றும். ஆனால் அவனும் ஒரு திருடன் என்பதால் தான் கைதுசெய்யப்பட்டான்.

ஒருவன் செய்வது என்னென்ன என்று அவனுக்குத் தான் தெரியும் என்று நாம் நினைக்கின்றோம். அது தவறு. இன்னொருவனுக்கும் அது தெரியும்.

அப்படித் தெரிந்தவன் தான் கடவுள். சுந்தரர் ஆற்றிலிட்டு விட்டுக் குளத்தில் எடுத்தது போலச் செய்யும் குற்றங்களுக்குத் தண்டனைகள் கிடைக்கும்; செய்யும்

உதவிகளுக்கும் பலன் கிடைக்கும். நாம் ஒருவருக்கு உதவி செய்தால் இன்னொருவர் எமக்கு உதவுவார்.

283. களவினால் ஆகிய ஆக்கம் அளவுஇறந்து
ஆவது போலக் கெடும்.

களவெடுத்த பொருட்களால் உண்டாகிய ஆக்கம் பெருகுவது போலத் தோன்றி, இயல்பாக இருந்த ஆக்கத்தையும் அழித்து விடும்.

தான் செய்வது பிறருக்குத் தெரியாது என்று யாரும் நினைத்தல் கூடாது.

அது கடவுளுக்குத் தெரியும். அதை விடப் பெரியவர்களுக்குத் தெரியும்; அரசனுக்குத் தெரியும். தற்பொழுது அரச ஆட்சிமுறை அற்றுப் போனாலும் அதற்கென இருக்கும் நீதிபதிக்குத் தெரியும்.

705. குறிப்பின் குறிப்புஉணரா ஆயின் உறுப்பினுள்
என்ன பயத்தவோ கண்.

ஒருவனது கண்களையும் முகத்தையும் பார்த்து அவன் என்ன நினைக்கிறான் எனக் குறிப்பால் அறிந்து கொள்ள முடியாதவனுக்குக் கண்கள் இருந்தும் ஒரு பயனும் இல்லை.

708. முகம்நோக்கி நிற்க அமையும் அகம்நோக்கி
உற்றது உணர்வார்ப் பெறின்.

உள்ளக் குறிப்பை வைத்து என்ன நடைபெற்றது என்று உணரும் வல்லமை உள்ளவன் எதிரியின் முகத்தைப் பார்த்ததும் யாவற்றையும் அறிந்து கொள்வான்.

இவ்வாறு திருவள்ளுவர் கூறுகிறார். இதை அறியாதவர்கள் தான் தாம் செய்பவை யாருக்கும் தெரியாதென நினைக்கின்றனர்.

குற்றம் செய்தவன் கட்டாயம் தண்டனை அனுபவிப்பான். அப்படி அனுபவிக்காவிட்டால் உலகின் சமநிலை தவறிவிடும். எல்லோரும் கூசாது குற்றங்களைச் செய்து கொண்டே இருப்பார்கள்.

ஒருவனது செல்வம் குறைவடையாமல் இருக்க வேண்டுமானால் அவன் பிறனுடைய கைப்பொருளை விரும்பாதிருத்தல் வேண்டும்.

விளைவுகளை எண்ணாமல் பிறரின் பொருளை விரும்பினால் அது அழிவைத் தரும். அப்பொருளை விரும்பாமல் வாழ்ந்தால் வெற்றியைத் தரும். இவ்வாறு வள்ளுவர் கூறுகிறார்.

வாழ்க்கை வாழ்வதற்கே என்று இந்துமதம் கூறுகிறது. அதனால் சகல வளங்களையும் பெற்று இம்மையிலும் மறுமையிலும் ஓர் ஆத்மா இன்பமாக வாழவேண்டும் என்று கருதிச் சில நெறிமுறைகளைக் கணித்து வைத்திருக்கிறது. அதன் படி வாழ்பவன் சகல இன்பங்களையும் பெற்று வாழ்வான்.

இந்து சமயம் உணவு விடயத்தில் மிகுந்த கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. இதனால் இந்துக்கள் சிரமப்படுகிறார்கள் என்று தான் கூறவேண்டும். இந்து ஒருவன் உணவில் கடைப்பிடிக்க வேண்டியவை எவை எவையெனக் கூறுங்கள்?

மனித வாழ்வில் காமத்தைப் போல அதிக சக்தியுள்ளது பசி. பசி வந்தால் பத்தும் பறந்துவிடும் என்று பெரியவர்கள் கூறுவார்கள். பசிக்கு உணவு வேண்டும். பசித்தால் எதையாவது

வயிறு நிறைய உண்டால் பசி அடங்கிவிடும். ஆனால் உடல் சக்தி பெறமாட்டாது. சக்தி பெறவேண்டுமானால் சத்துள்ள உணவுகளை உண்ண வேண்டும்.

சத்துள்ள உணவுகள் என்றதும் அதிகமானோர் அசைவ உணவுகளையே குறிப்பிடுவார்கள். அசைவ உணவுகள் இன்னொரு பிராணியின் உடல்களாகும். இதை வள்ளுவர் பின்வருமாறு கூறுகிறார்.

254. அருளல்லது யாதெனில் கொல்லாமை கோறல்
பொருளல்லது அவ்வூன் தினல்.

ஓர் உயிரைக் கொல்லாமல் வாழ்வது தான் அறம். ஓர் உயிரைக் கொன்று அதன் ஊனைத் திண்பது அருளுமாகாது; அறமும் ஆகாது.

256. தினல்பொருட்டால் கொல்லாது உலகுஎனின் யாரும்
விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல்.

புலால் தின்னும் பொருட்டு உலகத்தவர் உயிர்களைக் கொல்லாதிருந்தால், விலையின் பொருட்டு மாமிசத்தை விற்பனை செய்வோர் இல்லாமற் போவர்.

257. உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதுஒன்றன்
புண்அது உணர்வார்ப் பெறின்.

புலால் என்பது இன்னோர் உயிரின் புண் என்பதை ஆராய்ந்து அறிந்து கொண்டால், புலாலை ஒருவரும் உண்ண மாட்டார்கள்.

259. அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று.

நெய் சொரிந்து ஆயிரம் வேள்விகள் செய்வதை விட, ஓர் உயிரைக் கொன்று அதன் உடம்பைத் தின்னாமல் இருப்பது நல்லது.

புலால் மறுத்தல் என்ற அதிகாரத்தில் மேற்கண்டவாறு கூறிய வள்ளுவர் கொல்லாமை என்ற அதிகாரத்தில் பின்வருமாறு கூறுகிறார்.

321. அறவினை யாதெனில் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாம் தரும்.

அறமாகிய செயல் எதுவென்றால் ஓர் உயிரையும் கொல்லாமை ஆகும். கொல்லுதல் அறமில்லாத எல்லாச் செயல்களையும் செய்ய வைக்கும்.

324. நல்லாறு எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
கொல்லாமை சூழும் நெறி.

உயிர்கள் எதையும் கொல்லாமல் வாழும் வாழ்க்கை தான் மிகச் சிறந்த அறவாழ்க்கை என்று நீதி நூல்கள் பலவும் கூறுகின்றன.

326. கொல்லாமை மேற்கொண்டு ஒழுகுவான் வாழ்நாள்மேல்
செல்லாது உயிருண்ணும் கூற்று.

கொல்லாமை என்ற அறத்தினைக் கைக் கொண்டு வாழும் ஒருவனின் வாழ்நாளில் உயிரைக் கவர்ந்து செல்லும் கூற்றுவனும் செல்லமாட்டான்.

330. உயிர்உடம்பின் நீக்கியார் என்ப, செயிர்உடம்பின்
செல்லாத்தீ வாழ்க்கை யவர்.

நோய் மிகுந்த உடம்போடு வறுமையால் வாடும் இழிவான நிலை, முன்னர் உயிர்க் கொலை செய்தவர்களுக்கு ஏற்படும்.

உயிர்களைக் கொலை செய்து, அதன் உடலை உண்ணக்கூடாது என்று இந்து சமயங்கள் கூறுகின்றன. பாவங்களை ஐந்தாக வகுத்த இந்துதர்மம் கொலையைப் பஞ்சமா பாவங்களுள் ஒன்றெனக் கூறுகிறது.

இந்து சமயங்கள் ஆறும் உயிர்க்கொலையைக் கண்டிப்பதோடு, அதன் உடல்களை உண்ணக்கூடாதென்று கூறுகின்றன.

இந்து சமயங்கள் மனிதனது சகல செயல்களுக்கும் விதியமைத்துள்ளன. உதாரணமாகப் பின்வரும் விதிகளைப் பாருங்கள்.

வெள்ளை நிற வீபூதியையே தரித்தல் வேண்டும்.

வீபூதியைப் பட்டுப்பையில் அல்லது வீபூதி மடலில் இட்டுப் புனிதமான இடத்தில் வைத்து, அதிலிருந்து வீபூதியை எடுத்துத் தரித்தல் வேண்டும்.

வீபூதியை கிழக்கு முகமாக நின்று தரிப்பது சிறப்பு. வடக்கு முகமாக நின்றும் தரிக்கலாம்.

பகலிலே வடக்கு முகமாகவும், இரவிலே தெற்கு முகமாகவும் இருந்து கொண்டு மலசலம் கழித்தல் வேண்டும்.

ஓடை, குளம், கேணி, மடு முதலியவற்றில் தொப்புள் அளவிலாள சலத்தில் இறங்கி வடக்கு முகமாக நின்று ஸ்ஞானம் செய்தல் வேண்டும். ஆற்றில் ஸ்ஞானம் செய்வதாயின் அதற்கு எதிர்முகமாக நிற்று ஸ்ஞானம் செய்தல் வேண்டும்.

இப்படி மனித வாழ்வின் ஒவ்வொரு செயலுக்கும் இந்து மதம் விதி சமைத்து வைத்துள்ளது.

பிறந்த குழந்தைக்கு முதல் முதலாக உணவு கொடுப்பதை ஒரு மதச்சடங்காக வகுத்து வைத்துள்ளது.

ஆண்குழந்தையானால் குழந்தை பிறந்து ஏழாவது, ஒன்பதாவது, பதினொராவது மாதத்தில் அன்னப் பிராசனம் செய்யவேண்டும்.

பெண்குழந்தையானால் குழந்தை பிறந்து ஆறாவது, எட்டாவது, பத்தாவது அல்லது பன்னிரண்டாவது மாதத்தில் அன்னப் பிராசனம் செய்ய வேண்டும்.

குழந்தைக்குப் பாலூட்டல், முடியெடுத்தல், காது குத்தல், உபநயனம் செய்தல் போன்றவற்றிற்கும் இந்து சமயம் விதியமைத்து வைத்துள்ளது.

இந்து சமயம் உணவு சம்பந்தமான விடயங்களில் பல விதிகளை அமைத்து, அவற்றை 'அநுட்டானம்' என்று சொல்கிறது.

உணவை வாழையிலை, பலாவிலை, புன்னையிலை, தாமரையிலை, பாதிரியிலை, வாழை மடல் என்பவற்றில் இட்டு உண்ண வேண்டும்.

வாழையிலையில் படைக்கப்பட்ட உணவை, வலக்கையால் படைக்கப்பட்ட உணவில் வலப்பாகத்திலுள்ள உணவைப் பிரித்து வேறாக்கி அதை பருப்புடனும் நெய்யுடனும் பிசைந்து உண்ணவேண்டும். பின் சிறிது உணவைப் பிரித்தெடுத்து கறி வகையுடன் பிசைந்து உண்ண வேண்டும். இப்படி உண்ணும் போது இரசத்தையும் சேர்க்கலாம். விரத நாளில்லாத வேளையில் பொரியல் வகைகளையும், மோரையும், ஊறுகாயையும் சேர்த்துக் கொள்ளலாம். விரத நாட்களில் உப்பு, புளி, வாசனைத் திரவியங்கள், ஊறுகாய், பொரித்த காய்கறிகள் பலவற்றைக் கட்டாயம் தவிர்த்தல் வேண்டும். உண்டு எஞ்சிய உணவு வகைகளைக் காகம், பசு என்பவற்றிற்கு இடுதல் கூடாது. உண்ணுமுன் இவற்றிற்கும் சிவனடியார்களுக்கும் கொடுத்தல் வேண்டும். போசனஞ் செய்யுமுன் பஞ்சாட்சர மந்திரத்தை ஓதவேண்டும். இப்படியாக

உணவு உண்ணும் முறைகளைப்பற்றி இந்து தத்துவம் கூறுகிறது.

ஒருவன் வாழ்வதற்கு உணவு தேவை. வெற்றி பெறுவதற்குப் பலம் தேவை. பலத்தைக் கொடுப்பது சத்தான உணவுகள். பலவான் வெற்றி பெறுவான். வெற்றி பெறுவதற்கு மனத்திடமும் விடாமுயற்சியும் நம்பிக்கையும் தேவை. இந்த மூன்றையும் அளிப்பது சத்தான உணவுகள்.

நல்ல உணவுவகைகளை உண்பவன் பாக்கியவான். அவன் முற்பிறப்பில் செய்த புண்ணியங்களின் பலனால் தான் பிறவிகள் தோறும் நல்ல வாழ்வைப் பெறுகிறான்.

விதைத்த விதைதான் முளைத்துப் பயன்தரும். நிலத்திற்கு எவ்வளவு பசளையிட்டாயோ அதுவே பலனாக வரும். விதியென்பது ஒவ்வொருவரும் செய்யும் செயல்கள் தான். பஞ்சமா பாதங்களைச் செய்துவிட்டுக் கோயில்களுக்குச் செல்வதாலோ அல்லது பெரும் நிதி கொடுத்து பூசைகள் செய்வதாலோ அல்லது கோயில்களைக் கட்டுவதாலோ பயன் இல்லை.

புண்ணியவான் நல்ல மனைவியைப் பெறுகிறான். அதன் பின் நல்ல பிள்ளைகளைப் பெறுகிறான். இதை இவ்வாறு வள்ளுவர் கூறுகிறார்.

60. மங்கலம் என்ப மனைமாட்சி; மற்றுஅதன்
நன்கலம் நன்மக்கட் பேறு.

மனைவியின் நற்பண்புகளே இல்வாழ்க்கைக்கு மங்கலம் என்றும் அதன் பேறாக நல்ல மக்களைப் பெறுதலே நல்லணிகலம் என்றும் பெரியோர் கூறுவர்.

இந்து தர்மம் மாதா, பிதா, குரு, தெய்வம் என்று கூறித் தாய்க்கு முன்னுரிமை கொடுக்கிறது. எல்லாத் தாய்களும்

தெய்வம் என்று இந்து மதம் கூறுகிறது. பொதுவாக எல்லாத் தெய்வங்களும் தம் பிள்ளைகளுக்கு நல்ல உணவு, நல்ல உடை, உயர்ந்த கல்வி என்பவற்றைக் கொடுக்கவே விரும்பும்.

62. எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கள் பெறின்.

பழியில்லாத நல்ல பண்புடைய மக்களைப் பெற்றோரை ஏழு பிறவிகளிலும் தீவினைகள் எவையும் சென்று சேராது.

69. ஈன்ற பொழுதின் பெரிதுஉவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.

தன்மகனை நற்பண்புள்ளவன் எனப்பிறர் சொல்லக் கேள்வியுற்ற தாய், தான் அவனைப் பெற்ற காலத்தில் அடைந்த மகிழ்ச்சியை விடப் பெரிதும் மகிழ்வாள்.

தாயைப் பற்றி இதற்கு மேல் கூற எதுவுமில்லை.

அடுத்து மனைவி: ‘‘மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்’’ என்று இந்து தத்துவம் கூறுகிறது.

ஓர் உயிர் கன்ம வினைக்கேற்பப் பிறவிகளை எடுக்கிறது. நல்வினை செய்த உயிர் எப்பொழுதும் நல்ல பிறப்பையே எடுக்கும். அதன் வாழ்நாளில் நல்ல தாய் கிடைப்பாள்; நல்ல சகோதரர்கள் கிடைப்பார்கள்; நல்ல மனைவி அல்லது கணவன் கிடைப்பான். அதைவிட நல்ல சுற்றத்தார் கிடைப்பார்கள்.

நல்ல தாயைப்பற்றி வள்ளுவர் கூறியதை முன்பு கூறியுள்ளேன். நல்ல மனைவியைப் பற்றி வள்ளுவர் கூறுவதைப் பாருங்கள்.

51. மனைத்தக்க மாண்புஉடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

இல்வாழ்க்கைக்கு ஏற்ற நற்பண்புகளை உடையவளாகித் தன் கணவனின் பொருளாதார வளத்திற்கேற்ப வாழ்க்கை நடத்துகின்றவளே வாழ்க்கைத்துணை ஆவாள்.

53. இல்லதென் இல்லவள் மாண்பானால்; உள்ளதென்
    இல்லவள் மாணாக் கடை?

நற்குணங்களையுடைய இல்லாள் வாழும் வீட்டில் இல்லாதவையென எதுவும் இருக்கமாட்டாது. நற்குணங்கள் அவளிடம் இல்லையாயின் அவ்வீட்டில் எதுவும் இராது.

56. தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
    சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

தன்னையும் காத்து தனது கணவனின் நலன்களையும் பேணிக்காத்து அன்பாகப் பேசி வாழ்கின்றவளே பெண்.

நல்ல மனைவி அமைந்தால் வீட்டிலேயே சொர்க்க வாழ்வை அனுபவிக்கலாம்.

நல்ல மனைவி அமையப்பெறாவிட்டால் கணவனால் எந்தப் பயனையும் அடைய முடியாது என்கிறார் வள்ளுவர்.

அடுத்துச் சுற்றத்தார்களைப் பற்றி வள்ளுவர் இப்படிக் கூறுகிறார்.

523. அளவளாவு இல்லாதான் வாழ்க்கை குளவளாக்
    கோடுஇன்றி நீர்நிறைந் தற்று.

சுற்றத்தவருடன் மனம் கலந்து அன்பாகப் பழகும் தன்மை இல்லாதவனுடைய வாழ்க்கை, கரையில்லாத குளத்தில் நீர் நிறைந்ததைப் போன்றது.

525. கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய
    சுற்றத்தால் சுற்றப்படும்.

பொருள் கொடுத்தாலும், இன் சொல் கூறுதலுமாகிய இரண்டு பண்புகளையும் உடையவனைச் சுற்றத்தவர் எப்பொழுதும் சூழ்ந்திருப்பர்.

சுற்றத்தாரை, நண்பர்களை, குடும்பத்தவர்களைப் பேணி அவர்களைச் சேர்த்து வைத்து என்றும் வாழ்வை இனிக்கச் செய்பவள் நல்ல மனைவி.

ஒரு நல்ல மனைவியால் தான் கணவனின் மனதைச் சமநிலைப்படுத்த முடியும்; நம்பிக்கை உள்ளவனாக வாழவைக்க முடியும்; அவன் செய்யும் தொழில்கள் யாவற்றிலும் வெற்றியடையச் செய்ய முடியும்.

இவற்றை விட உடல் ஆரோக்கியமுள்ளவனாக வாழவைக்க முடியும். உடல் ஆரோக்கியமுள்ளதாகக் குடும்பத்தை மாற்றுவதில் முக்கிய பங்கு வகிப்பது உணவு.

ஒருவனுக்குப் பாவற்காய்க்கறியில் விருப்பமில்லை. அதற்குக் காரணம் அதில் உள்ள கசப்புத்தன்மை. அவனுக்குக் கத்தரிக்காய் பொரித்த குழம்பும், உருளைக்கிழங்குக் கறியிலும் தான் விருப்பங்கூட. சுவையாகச் சமைக்கத் தெரிந்த அவனது மனைவி பாவற்காயை மிகவும் சுவையாகச் சமைத்துக் கொடுத்தாள். அதன் சுவையைப் புகழ்ந்த அவன் அதன் பின் கத்தரிக்காய்க் குழம்பையும், உருளைக்கிழங்குப் பிரட்டலையும் விலக்கிவிட்டுத் தனியே பாவற்காய்க்கறியுடன் உண்டான்.

உணவு தான் உலகில் உள்ள தீமைகள் யாவற்றிற்கும் காரணி. அத்துடன் உடலில் உள்ள நோய்களுக்கெல்லாம் காரணி.

உணவு பலத்தையும் தரும்; நோயையும் உண்டாக்கும்; அதைத் தீர்த்தும் வைக்கும். அதனால் வள்ளுவர் உணவை மருந்து என்று சொன்னார்.

942. மருந்துஎன வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்.

முன்னர் உண்ட உணவு சமிபாடு அடைந்த பின்பு, அடுத்த வேளை உணவை அளவோடு உண்டால் உடம்புக்கு மருந்து என ஒன்று வேண்டியதில்லை.

943. அற்றால் அளவுஅறிந்து உண்க; அ∴துடம்பு
பெற்றான் நெடிதுஉய்க்கும் ஆறு.

முன்னர் உண்ட உணவு சமிபாடு அடைந்த பிறகு, அளவோடு நல்ல உணவை அறிந்து உண்பதே நீண்ட காலம் வாழ்வதற்கான வழியாகும்.

944. அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறுஅல்ல
துய்க்க துவரப் பசித்து.

முன்னர் உண்ட உணவு சமிபாடு அடைந்த பின், தனது உடம்புக்கு ஏற்ற உணவு வகைகளை நன்றாக அறிந்து பசி ஏற்பட்ட பின்னரே உண்ண வேண்டும்.

946. இழிவுஅறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபே ரிரையான்கண் நோய்.

குறைந்தளவு உணவை அது இன்ன தென்று அறிந்து உண்பவனிடம் இன்பம் நிலைத்திருக்கும். அளவுக்கதிகமாக உண்பவனிடத்தில் நோயே நிலைத்து நிற்கும்.

947. தீயளவு அன்றித் தெரியான் பெரிது உண்ணின்
நோயளவு இன்றிப் படும்.

பசித்தீயின் அளவு அறிந்து உண்ணாமல் அளவுக்கதிகமாக உண்பவன் அளவில்லாத நோய்களுக்குள்ளாக்கி அவதிப்படுவான்.

மனிதனின் வாழ்வை நிர்ணயிக்கும் உணவைப் பற்றி வேதங்கள், ஆகமங்கள், உபநிடதங்கள் என்பனவும் பகவத்கீதையும் மிகவும் விரிவாகக் கூறுகின்றன.

இந்துத் தெய்வங்களுக்குப் பிரியமான உணவு வகைகள் இருக்கின்றன. அவற்றைப் படைத்து இந்துக்கள் மகிழ்கிறார்கள். அத்துடன் தாம் விரும்பியவற்றையும் பெறுகிறார்கள்.

''பாலும் தெளிந்த தேனும், பாகும், பருப்பும் கலந்துனக்கு நான் தருகிறேன். நீ எனக்கு இயல், இசை, நாடகம் என்ற சங்கத்தமிழ் மூன்றையும் தா'' என்று விநாயகரிடம் ஔவையார் கேட்கிறார்.

இந்துக்கள் தம் இஷ்ட தெங்வங்கள் விரும்பும் உணவு வகைகளைப் பொங்கிக் படைப்பதையும் இன்றும் காண்கிறோம்.

விநாயகருக்கு பால், பழங்கள், மோதகம், அவல் போன்ற இனிப்புப் பதார்த்தங்கள்,

முருகனுக்கு பழங்கள், பால், தேனும் தினைமாவும் கலந்து செய்த மாவிளக்கு,

விஷ்ணுவுக்கு இனிப்புப் பண்டங்கள், பனிகாரங்கள், வெண்ணெய் சேர்ந்த உணவுகள்,

வைரவருக்கு பழம், பால், வடை, முறுக்கு, மிளகு சாதம் முதலியன.

சிவனுக்கு பக்தர்கள் தாம் விரும்பியவை அனைத்தையும் படைக்கலாம்.

பெண் தெய்வங்களுக்கு இனிப்பான உணவு வகைகள். ஆனால் காளிக்கு உறைப்பான உணவு வகைகள். இப்படி

ஒவ்வொரு தெய்வங்களும் விரும்பி உண்ணும் உணவுகள் உண்டு.

இந்து மதத்தெய்வங்கள் மனிதனைப் போலவே வாழ்ந்து காட்டியமை இந்துக்களுக்குத் தெரியும். அவை காதல் வசப்பட்டுள்ளன; காமவசப்பட்டுள்ளன. அதுபோலப் பக்தர்களிடம் உணவை இரந்து கேட்டுப் பெற்று உண்டும் உள்ளன.

கண்ணப்பர் தான் சுவைத்த மாமிசத்தைச் சிவனுக்குக் கொடுத்தார்.

முருகன் ஔவையாரிடம் பழங்களைப் பெற்று உண்டார்.

விநாயகர் ஔவையாரிடமும், அந்தணர்களிடமும் உணவைப் பெற்று உண்டார்.

ஆழ்வார்களும், ஆயர்குலப் பெண்களும் தாமுண்டு விட்டுக் கொடுத்த வெண்ணெயையும், பழங்களையும் கிருஷ்ணர் உண்டு மகிழ்ந்தார்.

சிவபெருமான் அடியார்களின் வீடுகளுக்குச் சிவனடியார் போல வேடம் பூண்டு சென்று அவர்களிடம் உணவு இரந்து உண்ட கதைகளை நாம் பெரிய புராணத்தில் படித்திருக்கி - றோம்.

எல்லாவற்றிற்கும் மேலாகச் சிறுத்தொண்ட நாயனார் வீட்டுக்குச் சிவனடியார் வேடத்தில் சென்ற சிவபெருமான், சிறுத்தொண்டரின் மகனை அரிந்து கறிசமைத்துத் தரும்படி கேட்டார்.

மனித உடலைப் பலமுள்ளதாக்குவது உணவு. இதை பகவத்கீதை மிகவும் அருமையாகச் சொல்கிறது.

பகவத்கீதையின் மூன்றாவது அத்தியாயமான கர்ம யோகத்தின் பதின்மூன்றாவது சுலோகம் இப்படிச் சொல்கிறது.

“சமைத்த உணவைத் தானம் செய்தல் வேண்டும். தானம் செய்த பின் எஞ்சியதை உண்ண வேண்டும். தங்கள் பொருட்டு சமைக்கும் பாபிகள் பாவத்தையே உண்கிறார்கள்”.

இல்வாழ்வான் தினமும் ஐந்து வேள்விகளைச் செய்தல் வேண்டும். அவையாவன, தேவர்களுக்கு உணவளித்தல்; பிதிர்களுக்கு உணவளித்தல், நரர்களுக்கு அதாவது வறிய மக்களுக்கு உணவளித்தல், விலங்குகளுக்கு உணவளித்தல் இதை இந்து தர்மம் தேவயக்ஞம், ரிஷியக்ஞம், பித்ருயக்ஞம், நரயக்ஞம், பூதயக்ஞம் என்று கூறுகிறது.

பகவத்கீதையின் ஞானகர்ம ஸந்யாஸ யோகத்தின் முப்பத்தோராவது சுலோகம் இப்படிக் கூறுகிறது.

“தானம் செய்து எஞ்சும் அமுதை உண்போர் அழியாப் பொருளாகிய பிரம்மத்தையடைகிறார்கள். தானம் செய்யாதவர் - களுக்கு இவ்வுலகேயில்லையென்றால் அவ்வுலகு ஏது?”

உணவு உட்கொள்ளும் அளவு பற்றியும் பகவத்கீதையின் தியானலோகத்தின் பதினாறாவது சுலோகம் கூறுகிறது.

“அளவுக்கதிகமாக உண்பவனுக்கு யோகமில்லை. அறவே உண்ணாதவனுக்கும் அஃது இல்லை. மிகைபட உறங்குபவனுக்கும், மிகை பட விழித்திருப்பவனுக்கும் யோகம் இல்லை”

இதைத் தான் வள்ளுவர் மருந்து என்ற அதிகாரத்தில் கூறியுள்ளார்.

எத்தன்மையான உணவுகளை உண்ணவேண்டும் என்று பகவான் மஹாவிஷ்ணு பகவத்கீதையின் சிரத் தாத்ரய விபாக யோகத்தில் கூறியுள்ளார்.

ஒவ்வொருவருக்கும் விருப்பமான உணவு மூவகைப்படும்.

ஆயுள், அறிவு, பலம், ஆரோக்கியம், சுகம், ருசி ஆகியவற்றை வளர்ப்பவைள், ரசமுள்ளவைகள், பசையுள்ள – வைகள், வலிமை தருபவைகள், இன்பமானவைகள் ஆகிய ஆகாரங்கள் சாத்வீகர்களுக்குப் பிரியமானவைகள்.

கசப்பு, புளிப்பு, உவர்ப்பு, பெருவெப்பம், காரம், வரட்சி, எரிச்சல் உடைய உணவு வகைகள் ரஜோகுணமுடையவர்-களுக்கு விருப்பமானவை.

யாமம் கழிந்த, சுவையற்ற, அழுகிய, பழைய, எச்சிலான, தூய்மையற்ற உணவுகள் தமோ குணமுடையவர் - களுக்குப் பிரியமானவை.

இப்படிப் பகவத்கீதை சொல்கிறது. சத்தான சைவ உணவை அளவோடு உண்பவன் சாத்வீக குணமுடையவன். இவன் எவ்வேளையிலும் சுறுசுறுப்பு மிக்கவனாகவும் இருப்பான். அன்பும், பண்பும், அறமும் அவனின் இதயத்தை நிரப்பியிருக்கும்.

ராஜோகுணமுள்ள மனிதர்தான் உலகில் அதிகமாக வாழ்கின்றனர். போட்டி, பொறாமை, வஞ்சகம், சூது போன்றவை இக் குணமுடையோரில் அதிகம் காணப்படும்.

தாமோகுணமுடையவன் சோம்பேறியாகவே வாழ்வான். எதற்கும் பிறரை நம்பியே இருப்பான்.

உணவு முறைதான் இம்மூன்று குணங்களையும் தீர்மானிக்கிறது.

உணவுகள் தான் உணர்வுகளை உருவாக்குகின்றன.

உணர்வுகள் எண்ணங்களை உருவாக்குகின்றன.

எண்ணங்கள் செயலாக உருவாக்கப்படுகின்றன.

செயல்கள் பலன்களைக் கொடுக்கின்றன.

தாவரங்களை உணவாக உட்கொள்ளும் மிருகங்கள் கூடச் சாதுவானவையாக, தன்னைப் பிறருக்கு அர்ப்பணிப்ப - வையாக, மற்ற உயிர்கள் மீது அன்பு கொண்டவையாக வாழ்வதை நாம் பார்க்கிறோம். சாத்வீகமான உணவை உட்கொண்டால் மனமும் சாத்வீகமாக இருக்கும். மாமிச உணவை உட்கொண்டால் உணர்ச்சிகள் அதிகரிக்கும். மிருக உணர்வுகள் மேலோங்கும். அதனால் தீயகுணங்கள் உண்டாகும். இன்று மாமிச உணவு வகைகளை உண்பவர்கள் குணப்படுத்த முடியாத நோயாளிகளாக இருப்பதை நாம் காண்கிறோம்.

வாழ்க்கையை இனிக்கச் செய்வது உணவு. உணவை எப்படி அமர்ந்திருந்து உண்ண வேண்டும் என்றும் இந்து தர்மம் கூறுகிறது.

கோமயத்தினால் மெழுகப்பட்ட சுத்தமான இடத்தில் உறுதியானதும், அதிக உயரமில்லாததும், மிகத் தாழ் வில்லாததும், துணி, மான் தோல், தர்ப்பைப் புல்லால் செய்த பாய் முதலியவற்றுள் ஏதாவது ஒன்றில் அமர்ந்திருந்து மனதை ஒருமுகப்படுத்தி, மனம், இந்திரியங்கள், என்பவற்றின் செயல்களை அடக்கி, கடவுளை வணங்கிப் போசனஞ் செய்தல் வேண்டும்.

ஒரு மனிதனின் உழைப்பின் பெரும்பகுதி உணவிற்கே செலவாகிறது. வாழ்க்கையில் சுவையான உணவைத் தினமும் உண்பவன் தனது வீட்டிலேயே சொர்க்கத்தை அனுபவிக்கிறான். சுவையான உணவு வகைகள் மூலம் மனிதர்களை வசீகரிக்க முடியும். ‘‘உப்பிட்டவரை உள்ளளவும் நினை’’ என்று ஓர்

அருள்மொழி தமிழில் உண்டு. அதன்படி உணவிட்டவரை மக்கள் மறக்கக் கூடாது. இறைவனை இசையால் கவரலாம். சுவையான உணவு வகையாலும் கவரலாம்.

நல்ல உணவு உண்ண முடியாதவன் பாவி. அவனால் உலகில் இன்பமாக வாழமுடியாது என்பதை வள்ளுவர் மிகவும் அழகாகக் கூறுகிறார்.

1049. நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்
யாதுஒன்றும் கண்பாடு அரிது.

ஒருவன் நெருப்பினுள்ளே தூங்க முடியும். ஆனால் வறுமைப்பட்டால் ஒருநாளாவது கண்மூடித் தூங்க முடியாது.

இரந்து உண்பவர்களைப் படைத்த இறைவனை வள்ளுவர் கோபமிகுதியால் சபிக்கிறார்.

1062. இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகுஇயற்றி யான்!.

உலகத்தைப் படைத்தவன் இரந்து தான் உயிர்கள் வாழ வேண்டும். என்ற நிலையில் சில உயிர்களைப் படைத்திருந்தால், அப்படிப் படைத்தவன் இரப்பவர்களைப் போல எங்கும் அலைந்து திரிந்து கெட்டுப் போகட்டும்.

முனிவர்கள் தவறு செய்ததாகத் தாம் நினைப்பவர்களைச் சபிப்பது வழக்கம். ஆனால் புலவர் ஒருவர் இறைவனைச் சபிக்கிறார். அதுவும் தனக்காக அல்ல. உணவுக்காகக் கையேந்துபவர்களின் கொடுமையைத் தாங்காது இரக்க மேலீட்டால் இறைவனைச் சபிப்பதிலிருந்து வறுமையின் தன்மை புலனாகிறது.

சுவாமி விவேகானந்தர் இந்து சமயத்தைப் பற்றி இப்படிக் கூறுகிறார்; ‘‘சமயமே இந்தியர்களின் வாழ்வில்

முதலிடம் பெற்றது. உண்பது, பருகுவது, உறங்குவது, நடப்பது, மணப்பது ஏன் திருடுவது கூடச் சமயச் சார்புடன் செயற்பட்டது. துறவிகள் வீடுதோறும் சென்று பிச்சை ஏற்பதால் சமயமும் வீடுதோறும் சென்று பரவிற்று. ஒவ்வொருவருக்கும் எந்தச் செலவும் இல்லாமல் சமயக் கல்வி வீடு தேடி வந்தது. துறவிகளுக்கு இல்லறத்தார் அளித்த ரொட்டித்துண்டை வேண்டுமானால் செலவாகக் கொள்ளலாம். எனவே தான் இந்திய நாட்டில் மிகமிகத் தாழ்ந்த நிலையில் இருப்பவர் கூட, சமயக்கருத்துக்களை அறிந்தவர்களாக இருந்தனர். இது துறவிகள் ஆற்றிய திருத்தொண்டாகும்''.

இதைவள்ளுவர் விருந்தோம்பல் என்ற அதிகாரத்தில் மிகவும் சிறப்பாகக் கூறியுள்ளார்.

81. இருந்துஓம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்ஓம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

பொருள்களைத் தேடிக்காத்து இல்வாழ்க்கை நடத்துவதெல்லாம் விருந்தினரைப் பேணி உதவி செய்யும் பொருட்டே ஆகும்.

84. அகன்அமர்ந்து செய்யாள் உறையும் முகன்அமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல்.

முகமலர்வோடு விருந்தினரை வரவேற்று உபசரிக்கின்றவனது வீட்டில் மனமகிழ்வோடு திருமகள் வாழ்வாள்.

89. உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை; மடவார்கண் உண்டு.

பெரும் செல்வந்தர்களுக்கு உள்ள வறுமை என்பது, விருந்தோம்பலைப் போற்றாத அறியாமையாகும். இந்த அறியாமை அறிவிலிகளிடமே உள்ளது.

ஈகை என்ற அதிகாரத்தில் வள்ளுவர் பின்வருமாறு கூறுகிறார்.

225. ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்.

தவ வலிமை உடையவர்கள் பசியை பொறுத்துக் கொள்ளும் ஆற்றல் மிக்கவர்கள். இவ் ஆற்றலை விட மேலானது அப்பசியைப் போக்குபவனது வலிமை.

227. பாத்தூண் மரீஇ யவனைப் பசிஎன்னும்
தீப்பிணி தீண்டல் அரிது.

தான் பெற்ற உணவை பிறருடன் பகிர்ந்துண்ணும் வழக்கம் உடையவர்களைப் பசி என்னும் தீய நோய் நெருங்க மாட்டாது.

பசியைப் போக்குவது உணவு. வாழ்க்கையை இனிமைப்படுத்துவது உணவு. உணவை ஆசாரமாகவும், அளவாகவும் உண்ண வேண்டுமென்று இந்து தர்மம் கூறுகிறது. பொன்னில், பொருளில், பெண்ணில் ஆசை வைக்கக் கூடாது என்று கூறும் இந்து தர்மம் உணவிலும் ஆசையோ அவாவோ கொள்ளக்கூடா தென்கிறது.

உணவில் ஆசைப்பட்டால் ஆசைப்படும் வேளைகளில் அளவில்லாத இன்பங்கிடைக்கும். அதன் பின் அளவில்லாத துன்பங்கள் தான் வரும். அளவுக்கதிகமாக உண்பவர்கள் நோயாளியாகிவிடுகிறார்கள். அவர்கள் உண்ட உணவுகள் பலவற்றை அவர்கள் பின்னர் உண்ண முடியாது போய்விடும். இதற்காக இந்துமதங்கள் விரதங்களை அனுஷ்டிக்கும்படி

வற்புறுத்திக்கூறியுள்ளன. விரதம் என்பது உணவை ஒறுப்பதன் மூலம் மனதைக் கட்டுப்படுத்துவதாகும். மனதைக் கட்டுப் படுத்துவதன் மூலம் உடலின் ஆரோக்கியத்தைப் பேணமுடியும்.

ஆறு இந்து மதங்களும் தத்தமது சமயத்தின் தெய்வங்களுக்குரிய விரதங்கள் எவை எவையென்றும், அவற்றை எவ்வாறு அனுஷ்டிக்கவேண்டும் என்றும் கூறியுள்ளன.

சைவசமயம் பின்வரும் விரதங்களை சிவ விரதங்கள் என்று வரையறை செய்துள்ளது.

சோமவாரவிரதம், திருவாதிரை விரதம், சிவராத்திரி விரதம், கேதாரவிரதம், சூலவிரதம், இடப விரதம், பிரதோஷ விரதம் என்பன சிவவிரதங்களாகும்.

சுக்கிரவார விரதம், ஐப்பசி உத்தர விரதம், நவராத்திரி விரதம் என்பன தேவி விரதங்களாகும்.

சுக்கிரவார விரதம், விநாயக சதுர்த்தி விரதம், சங்ஹட சதுர்த்தி விரதம், விநாயகர் சஷ்டி விரதம் என்பன விநாயக விரதங்களாகும்.

சுக்கிரவாரவிரதம், கார்த்திகை விரதம், கந்தசஷ்டி விரதம் என்பன சுப்பிரமணிய விரதங்களாகும்.

மங்கலவிரதம், சித்திரைப் பரணி விரதம், ஐப்பசி பரணி விரதம் என்பன வைரவ விரதங்களாகும்.

மங்கல வாரத்தில் வீரபத்திரருக்கும் விரதம் அனுஷ்டிக்கலாம்.

இவை தவிர நவக்கிரகங்களில் ராகு கேது தவிர்ந்த ஏழு கிரகங்களுக்கும் வாரத்தில் உள்ள ஏழு நாட்களும் விரதம் அனுஷ்டிக்க வேண்டும்.

இது தவிரத் தாய் இறந்தால் பன்னிரு மாதங்களில் வரும் பௌர்ணமி தினங்களில் விரதம் அனுஷ்டிக்க வேண்டும்.

அது இயலாதவர்கள் சித்திரை மாதத்தில் வரும் பௌர்ணமி தினத்தில் கட்டாயம் விரதம் அனுஷ்டித்தல் வேண்டும்.

இது போலத் தந்தை இறந்தால் பன்னிரு மாதங்களில் வரும் அமாவாசையன்று விரதம் அனுஷ்டிக்க வேண்டும். அப்படி விரதம் அனுஷ்டிக்க முடியாதவர்கள் ஆடி அமாவாசையன்று கட்டாயம் விரதம் அனுஷ்டித்தல் வேண்டும்.

இந்துக்களைப் பொறுத்தவரை ஒவ்வொரு நாளும் விஷேட தினங்களாகும். அதனால் தான் இந்துக்கள் புலால் உணவுவகைகளை உண்ணக்கூடாது என்று இந்து மதம் கூறுகிறது.

விரதம் அனுஷ்டிப்பவர்கள் உபவாசமிருத்தல் உத்தமம். அப்படிச் செய்ய முடியாதவர்கள் இரவிலே உணவு உண்ணலாம். அதுவும் முடியாதவர்கள் பகலிலே சிறிது உணவை உண்டு, இரவில் பாலில் தண்ணீர் சமஅளவு கலந்து குடிக்கலாம். இல்லாவிட்டால் பணிகாரமும் பழமும் சிறிதளவு உண்ணலாம்.

விரதத்தின் நோக்கம் உடலுக்கும், மனத்திற்கும் ஆறுதல் அளிப்பதேயாம். மூன்று வேளைகளும் சத்தான உணவுகளை உண்போர் கடுமையான வேலைகளைச் செய்தல் வேண்டும். இல்லாவிட்டால் இரத்தத்தில் கொழுப்புச் சத்தும், சக்கரைச் சத்தும் அதிகரிக்கும். இவ்விரு சத்துக்களும் அதிகரிப்பதால் தான் உடலில் பல தீராத நோய்கள் உண்டாகின்றன.

தினமும் காலையும் மாலையும் உடற்பயிற்சி செய்பவர்கள் ஆரோக்கியத்துடன் வாழ்கிறார்கள். இந்த உடற்பயிற்சியை வீட்டில் யாரும் செய்யமாட்டார்கள்

என்பதற்காகத் தான் இந்து மதம் வழிபாட்டு முறைகளில் பயிற்சியைப் புகுத்தியுள்ளது.

கோயில் வீதியை ஐந்துதரம், ஏழு தரம், ஒன்பது தரம் இப்படி ஒற்றைப்பட சுற்றி நடப்பது தேகத்திற்குப் பயிற்சி. அப்பொழுது கடவுளை நினைத்தபடி நடப்பது மனதிற்குப் பயிற்சி.

தோப்புக்கரணம் போடுதல் மூலம் பல்வேறு நோய்கள் குணமாகின்றன. தினமும் காலையும் மாலையும் இருபத்தொருமுறை தோப்புக்கரணம் போடுபவனுக்கு இரத்த அழுத்தம், இரத்தத்தில் கொழுப்பு எதுவும் வராது.

எனது நண்பர் ஒருவருக்கு எண்பத்தாறு வயது. அவர் தினமும் காலையும் மாலையும் இருபத்தொரு முறை தோப்புக்கரணம் போடுகிறார். அதனால் அவருக்கு எந்த நோய்களும் இல்லை. அவரது இளைய மகனுக்கு நாற்பத்து நான்கு வயது.நிலத்தில் இருந்து சாப்பிடமாட்டார். வைபவங்களில் அவர் சாப்பிடுவதில்லை.

ஒவ்வொருவரும் தமது உணவில் அன்றாடம் கீரை வகைகளைச் சேர்த்துக் கொள்ளல் வேண்டும். குறிஞ்சா, கறிவேப்பிலை, வல்லாரை, வேப்பிலை என்பவற்றைப் பச்சையாக உண்ண வேண்டும். காய்கறி வகைகள் பலவற்றைப் பச்சையாக உண்ணலாம். இப்படி மனிதனின் தேகாரோக்கியத்திற்காகவே இந்துமதம் உணவில் கட்டுப்பாடுகள் பலவற்றை விதித்துள்ளது. இவை யாவும் மனிதர்கள் இன்பமாக வாழக் கடைப்பிடிக்க வேண்டிய விதிகளே தவிரச் சட்டங்கள் அல்ல என்பதை இந்துக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

## இந்து சமயங்களும் நீரும்.

ஆரியர்கள் தான் இந்து மதத்தைத் தோற்றுவித்தனர் என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். அம்மதத்தை நிலை நிறுத்துவதற்காக வேதங்களையும் உபநிடதங்களையும் ஆக்கினர். இந்துதமத்தின் அடிப்படை நூலாக விளங்குபவை வேதங்கள். வேதங்களை உருவாக்கியவர் வேதவியாசர்.

வேதகால மனிதன் உணவுக்காக எங்கும் அலைந்து திரிந்தான். இயற்கையால் அவனுக்கு உண்டான துன்பங்களைக் கண்டு பயந்தான். அதனால் இயற்கையைத் தெய்வமாக வணங்கினான். இடியும் மின்னலும், மழையும், தீயும் பெரும் துன்பத்தை அவனுக்குக் கொடுத்தமையால் அவற்றை அவன் தெய்வமாக்கினான். இருக்கு வேதத்தில் 33 தெய்வங்கள் போற்றப்படுகின்றன. அவை அனைத்தும் இயற்கையின் வடிவங்களாகவே இருக்கின்றன.

மின்னலை ஆயுதமாகக் கொண்டிருக்கும் இந்திரனே வேதத்தில் முதன்மைத் தெய்வமாகக் காட்சி தருகின்றான். இந்திரனுக்கு அடுத்ததாக அக்கினியும், அக்கினிக்கு அடுத்து மழைத் தெய்வமான வருணனும் போற்றப்படுகின்றனர்.

இந்திரனையும், அக்கினியையும் வழிபட்ட மக்கள் அதேயளவு முக்கியத்துவம் கொடுத்து வருணனையும் வழிபட்டனர். அவனே மழையைத் தரும் கடவுள் என்று வேத கால மக்கள் நம்பினர்.

மழையில்லாவிட்டால் உலகில் எதுவும் நடைபெறாது. பிறப்புக் கூட மழையால் தான் உண்டாகின்றது என்று வேதகால மக்கள் நம்பினர்.

இருக்கு வேதத்தில் மழையைப் பற்றிய ஒரு பாடலின் கருத்து இது,

“வருணனே!

வலிமை அனைத்தும் பெற்றவனே!

உனை வணங்குகிறேன்.

தாவரங்கள் அனைத்தும் சூல் தரித்து விட்டன,

எங்கள் உணவு அதன் கர்ப்பத்தில் உள்ளது,

அவற்றை நிரப்பியவன் நீ

உன்னடியார்களாகிய நாம்

அங்கிருந்த உணவைப் பெறுகிறோம்

சக்தி வாய்ந்தவனே!

எமக்குத் தேவையானவற்றைக் கொடு.

இவ்வாறு புலவர்கள் வருணனை மழைத் தெய்வமாகக் கருதி அவனைப் பகழ்ந்து பாடி, தமக்குத் தேவையான உணவுப் பொருட்களைத் தந்துதருமாறு இரந்தனர்.

உணவின் மூலம் தான் உலகம் இயங்குகிறது என்றும், உணவின் மூலமே மனிதன் தனக்குத் தேவையான அத்தனை பொருட்களையும் பெறமுடியும் என்றும் நம்பினர்.

மழை இல்லாவிட்டால் உலகில் பசிய ஒரு புல்லின் தலையைக் கூடக் காணமுடியாது.

வேதகால மனிதன் இயற்கையைத் தனது தெய்வமாகக் கொண்டு அவை யாவும் தம்முடன் கூட இருப்பதாகக் கருதி அவற்றிற்குப் பயந்தும் மரியாதை கொடுத்தும் வாழ்ந்து வந்ததை நாம் புராண இதிகாசங்களில் இருந்தும் அறிந்து கொள்கிறோம். இதை விளக்கும் பாடல் ஒன்று இருக்கு வேதத்தில் உள்ளது.

“சர்வசக்தி வாய்ந்த வருணா,
நீ எமது நண்பன்
எங்கள் மன்னனும் நீயே
அதனால் பரிவுடன் எம்மை நேசிக்கிறாய்
போர் வீரனைப் போல எம்மைக் காக்கிறாய்
பொருட்களை எம்முன் குவிப்பதால்
நாம் உன்னை வணங்கி மகிழ்கிறோம்.
தேவர்கள் பலர் இருந்தும்
நீயே எம்மை ஆளும் தலைவன்
அனைத்தும் தந்து அரவணைக்கும் உன்னை
போற்றிப் பணிந்து மகிழ்வோம் நாமே!.

இவ்வாறு வேதப் பாடல்கள் வருணனை மிகவும் போற்றிப் புகழ்கின்றன. அதனால் வேதத்திற்குப் பின் வந்த நூல்களும் மழையின் சிறப்பைப் பற்றி விதந்து கூறுகின்றன.

திருக்குறள் கடவுள் வாழ்த்திற்கு அடுத்ததாக வான் சிறப்பைப் பற்றிக் கூறுகிறது.

மழை பெய்வதால் உலகம் வாழ்கிறது. அதனால் உலகத்தில் வாழும் உயிர்களுக்கு மழையானது அமிழ்து என்று உணரத்தக்கது.

உயிர்களுக்கு உண்ண உணவுப் பொருட்களை விளைவித்துக் கொடுப்பதோடு, பருகுபவர்களுக்கு ஓர் உணவாகவும் இருப்பது மழையாகும்.

மழை பெய்யாதுவிடின் கடலினாலே சூழப்பட்ட அகன்ற உலகில் வாழும் உயிர்களைப் பசி உள்ளே நிலைத்து நின்று வருத்தும்.

மழை எனப்படும் வருவாய் குறையுமேயானால் உயிர்களுக்கு உணவளிக்கும் உழவர் தமது கலப்பையைக் கொண்டு உழமாட்டார்.

பெய்யாமல் வாழ்வைக் கெடுப்பதும், கெடுத்தவர்களின் வாழ்வை பெய்து சிறப்பிப்பதும் மழையாகும்.

மழைத்துளியானது வானத்தில் இருந்து விழாதுவிடுமாயின் மண்ணில் பசிய புல்லின் நுனியைக் கூடக் காண முடியாது.

மேகமானது கடலிடத்தே நீரினைப் பெற்று மழையாகப் பெய்யாதுவிடின் நீர் கொடுத்த பெருங்கடலும் வற்றிவிடும்.

வானமானது மழை பெய்யாமல் போகுமானால் இவ்வுலகில் வானோர்க்காக நடைபெறும் திருவிழாக்களும், தினப் பூசைகளும் நடைபெறாது.

வானம் மழையை வழங்காது விடுமேயானால் பூவுலகில் தானம் வழங்கலும், தவம் செய்தலும் இல்லாது ஒழிந்துவிடும்.

நீர் இல்லாவிட்டால் உலகம் வாழாது. அத்துடன் மழை இல்லாவிட்டால் உலகில் ஒழுக்கமும் நிலைபெறாமல் போகும்.

மழை பெய்யாது விட்டால் தெய்வங்களுக்கும் பூசைகள் நடைபெறமாட்டாது. பூசைக்குத் தேவையான மலர்கள், இலைகள் எவையும் கிடைக்கமாட்டாது. அதனால் பூசைகள், யாகங்கள், தானதருமங்கள் எவையும் நடைபெறமாட்டாது. மழையில்லாவிட்டால் உலகம் அழிந்துவிடும்.

இப்படித் திருவள்ளுவர் கூறுவதைப் போலத் திருமூலரும் கூறுகிறார்.

வேதம் காலத்தால் முந்தியது. அதற்கடுத்தது திருமந்திரம்.

வேதங்களையும், திருமந்திரத்தையும் படித்த பின்பு வள்ளுவர் அதன் உட்பொருளை எடுத்துத் தந்துள்ளார்.

திருமூலர் வான் சிறப்பைப் பற்றிக் கூறும் பாடல்கள் இவை.

“அமுதூறு மாமழை நீரத னாலே
அமுதூறும் பன்மரம் பார்மிசை தோற்றுங்
கமுகூறு தெங்கு கரும்பொடு வாழை
அமுதூறுங் காஞ்சிரை ஆங்கதுவாமே”

“வரையிடை நின்றிழி வான் நீர் அருவி
உரையில்லை உள்ளத்தகத்து நின்றூறு
நுரையில்லை மாசில்லை நுண்ணிய தெண்ணீர்க்
கரையில்லை எந்தை கழுமணியாறே”

பெருமழையான அமுதத்தால் உயிர் வாழ்க்கைக்குத் தேவையான உணவு வகைகளைத் தரும் பல்வகையான மரங்களும் செழித்து வளரும். மழையில்லாவிட்டால் உணவைத் தரும் தாவரங்கள் யாவும் அழிந்து பெருந் துன்பத்தைத் தரும். அந்நிலை மரணத்தைத் தரும்.

ஒரு தலத்தின் மூலமூர்த்திக்கு உள்ள பெருமைகள் யாவும் அத்தலத்தின் தீர்த்தத்திற்கும் உண்டு. புண்ணிய நதிகளெல்லாம் சிவனின் சடையில் இருந்து உற்பத்தியாகி ஆகாய மார்க்கமாக வந்து பூமாதேவியை அடைந்து ஆறுதல் பெற்றதாகப் புராணங்கள் கூறுகின்றன. புண்ணிய நதிகளில் நீராடினால் நீராடுபவன் செய்த பாவங்கள் யாவும் தீரும் என்று இதிகாசங்கள் கூறுகின்றன.

திருநாவுக்கரசு நாயனார் உத்தர கைலாயத்திற்குச் செல்லவிரும்பிக் கால்நடையாகச் சென்றார். அவரது கால்கள் புண்ணாயின. அதனால் அவர் உருண்டுருண்டு சென்றார். அவரது உடல் புண்ணாகியது. அவரது உடல் நிலையைக் கண்டு கவலைகொண்ட சிவபெருமான் அவர் முன் தோன்றி, "அப்பா, தேவர்களால் கூடச் சென்றடைய முடியாத உத்தர கைலாயத்திற்கு உன்னால் செல்ல முடியாது. திரும்பிப்போ" என்றார்.

அதற்கு அப்பர்; "நான் இவ்விடத்தில் இறந்தாலும் இறப்பேனே தவிரத் திரும்பிச் செல்ல மாட்டேன்" என்றார்.

சிவபெருமான் மனம் மகிழ்ந்து, நீ தங்கியிருக்கும் சிவத்தலத்தின் புண்ணிய தீர்த்தத்தில் நீராடு" என்று கூறி மறைந்தார்.

திருநாவுக்கரசர் அப்புண்ணிய தீர்த்தத்தில் இறங்கி நீராடினார். உடனே அவரின் நோ எல்லாம் மாறியது. அவர் உத்தர கைலாயத்தை அடைந்தார்.

திருநீலகண்ட நாயனார் விபச்சாரியிடம் சென்றதால் அவரது மனைவி அவர் தன்னைத் தீண்டக்கூடாது என்று திருநீலகண்டத்தின் மீது சத்தியம் செய்தார். அதனால் திருநீலகண்டர் மனைவியைத் தொடுவதில்லை. பலகாலம் அப்படி வாழ்ந்தமையால் அவர்கள் இருவரும் வயோதிபராகினர். அவர்களது குறையைத் தீர்க்க விரும்பிய சிவபெருமான் ஒரு கிழப்பிராமண வடிவம் கொண்டு திருநீலகண்ட நாயனாரது வீட்டிற்கு வந்தார்.

அவ் அடியவரை, திருநீலகண்ட நாயனார் வரவேற்று உபசரித்தார். அதன் பின் அச்சிவனடியார் தனது திருவேட்டை

அவரிடம் கொடுத்து; ‘‘இதைப் பாதுகாப்பாகவை. நான் திரும்பி வந்து கேட்கும் போது தா’’ என்று கூறிவிட்டுச் சென்றார்.

சில நாட்களின் பின் அச்சிவனடியார் திரும்பி வந்து திருநீலகண்ட நாயனாரிடம் தான் கொடுத்த திருவேட்டைக் கேட்டார்.

திருநீலகண்ட நாயனார் வைத்த இடத்தில் அத்திருவேட்டைக் காணவில்லை. அதனால் மனங்கலங்கிய திருநீலகண்ட நாயனார் அச்சிவனடியாரிடம் வந்து திருவோடு வைத்த இடத்தில் காணாமல் போய்விட்டதென்று கூறி அதற்குப் பதிலாகப் பொன்னும் திரவியங்களும் தருவதாகக் கூறினார்.

அதை ஏற்க மறுத்த சிவனடியார்; ‘‘நீ கூறுவது உண்மையென்று சிதம்பரத்தில் உள்ள திருத்தலக் குளத்தில் உனது மனைவியின் கையைப் பிடித்துக்கொண்டு மூழ்கிச் சத்தியம் செய்’’ என்றார்.

‘‘தான் மனைவியைத் தொடுவதில்லை’’ என்று கூறிய திருநீலகண்ட நாயனார் ஒரு கம்பை எடுத்து அதன் ஒரு நுனியைத் தான் பிடித்துக் கொண்டு, மறுநுனியைத் தனது மனைவியைப் பிடிக்கச் சொல்லி, அவ்வாறு பிடித்தபடி திருக்குளத்தில் மூழ்கி எழுந்தார். அவர்களது முதிய உருவம் மாறி இளமை உருவம் வந்தது.

இவ்வாறு மூலமூர்த்திகளுக்குள்ள பெருமை அவ்மூல மூர்த்திகள் கோயில் கொண்டிருக்கும் திருத்தலப் புனித நீர் நிலைகளுக்கும் உண்டு.

இதை வேதங்களும் இதிகாச புராணங்களும் அறுதியிட்டுக் கூறுகின்றன.

கந்தர்ப்பம் என்ற நகரில் இந்திரன் சாபவிமோசனம் பெற ஒரு விநாயகர் ஆலயம் அமைத்தான். அவ் ஆலயத்திற்கருகில் கணேசகுண்டம் என்றொரு புனித தீர்த்தத்தையும் அமைத்தான். விநாயகரை வணங்கி, கணேச குண்டத்தில் நீராடியே இந்திரன் சாபவிமோசனம் பெற்றான். இக்கணேச குண்டத்தில் நோயுற்றவர்கள் மூழ்கித் தம் நோய்களைத் தீர்த்தனர். சாபம் பெற்ற தேவர்களும், முனிவர்களும், மனிதர்களும் இக் குளத்தில் மூழ்கினால் சாபவிமோசனம் பெறுவார் என்று விநாயகர் புராணம் கூறுகிறது.

இந்து சமயங்கள் நீருக்கு இறைவனுக்குக் கொடுக்கும் மதிப்பைக் கொடுக்கின்றன.

நீர் உலகைச் சுத்தமாக்கின்றது. அது உடலையும், மனதையும் சுத்தமாக்குகிறது.

இறைவனது மனதைக் குளிர்மைப்படுத்தி, மக்களின் விருப்புக்களைப் பூர்த்தி செய்து மகிழ்விக்கிறது.

உலகில் உள்ள ஜீவராசிகள் அனைத்தும் நீரால் தான் இன்பம் பெறுகின்றன.

இறைவனை ஆராதிப்பதற்கும், இறைவன் மீது அன்பு செலுத்துவதற்கும் நீர் உதவி செய்கிறது.

ஓர் உயிரின் உடலில் முக்கால் பங்கு நீரால் ஆனது.

‘‘ஸரஸாமஸ்மி ஸாகர’’ என்று பகவத்கீதையில் மஹாவிஸ்ணு கூறுகிறார். இதன் அர்த்தம், ‘நான் நீர் நிலைகளுள் சமுத்திரம்’’ என்பதாகும். சமுத்திர நீரே ஆவியாகி மழையாகப் பெய்கிறது.

உலகில் உள்ள உயிர்கள் எல்லாம் மழையை நம்பியே வாழ்கின்றன. அந்த மழை அரசன் நீதியாக அரசாண்டால் தான் பெய்யும் என்று வள்ளுவர் கூறுகிறார்.

542. வான்நோக்கி வாழும் உலகெல்லாம்; மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி.

உலகத்தில் உள்ள உயிர்கள் எல்லாம் மழையை நம்பி வாழ்கின்றன. அதே போல, குடிமக்கள் எல்லோரும் அரசனது செங்கோலை நம்பி வாழ்கின்றனர்.

545. இயல்புளிக் கோல்ஓச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளும் தொக்கு.

நீதி வழுவாது, அரசாளும் அரசனது நாட்டில் பருவ மழையால் நிறைந்த விளைவு ஏற்படும்.

அதுபோலக் கொடுங்கோல் ஆட்சி நடைபெறும் நாடுகளில் மழை பெய்யாது என்றும் வள்ளுவர் கூறுகிறார்.

557. துளியின்மை ஞாலத்திற்கு எற்றுஅற்றே வேந்தன்
அளியின்மை வாழும் உயிர்க்கு.

மழைத்துளி இல்லா விட்டால் உலகம் எத்தன்மை யாகுமோ, அத்தன்மையானதே நாட்டில் வாழும் குடி மக்களுக்கு அருளில்லாத அரசனின் ஆட்சி.

559. முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல்.

அரசன் நீதி நெறி தவறி நாட்டை ஆட்சி செய்வானானால், அந்த நாட்டில் பருவ மழை தவறி மேகம் மழை பெய்யாமல் போகும்.

560. ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்
காவலன் காவான் எனின்.

நாட்டைக் காக்கும் காவலனான அரசன் முறைப்படி நாட்டைக் காக்கா விட்டால், பசுக்கள் பால் தருவதைக் குறைக்கும். அந்தணர்கள் அறநூல்களை மறந்து போவர்.

மழையில்லாவிட்டால் பசுக்கள் பாலைத்தராது. அதனால் கோயில்களில் பூசைகளும் நடைபெறாது.

இருக்கு வேதம் அக்கினி என்ற தெய்வம் மனிதனை இறைவனோடு தொடர்புபடுத்தி வைப்பது என்று கூறுகிறது. யாகம் செய்யும் போது அக்கியியிலிடப்படும் பொருட்கள் யாவும் இறைவனைச் சென்றடைகின்றன என்றும் இருக்கு வேதம் கூறுகிறது.

இதனால் தான் இந்துக்கள் ஒரு மனிதன் இறந்ததும் கிரிகைகளைச் செய்து அக்கினியிடம் அவ்வுடலைச் சமர்ப்பிக்கின்றனர். அதனால் அவ்வுடலுக்குரிய ஆத்மா இறைவனைச் சென்றடைகிறது என்று நம்புகின்றனர்.

சிவனின் சடையில் கங்காதேவி குடியிருக்கிறாள். உலகம் மழையில்லாமல் வரண்டு காய்ந்த போது இறைவனுக்கு அர்ச்சிக்க மலர்களோ, இலைகளோ கிடைக்கவில்லை. அதனால் தான் பகீரதன் என்ற அரசன் தவமிருந்து ஆகாயகங்கையைப் பூமியில் பாயச்செய்தான். ஆகாய கங்கை சிவனின் சடாமுடியிலிருந்து உற்பத்தியாக்கிப் பூமியை அடைந்ததென்று புராணங்கள் கூறுகின்றன. அதனால் தான் இந்துக்கள் பிதிர்க்கடனைப் புனிதமான நதிக்கரைகளில் செய்கின்றார்கள். அவர்கள் தமது பெற்றோர்களுக்கெனச் செய்யும் கருமங்களின் பின் படைக்கப்பட்டவற்றைக் கங்கையில் இடுகிறார்கள். கங்கையின் பிறப்பிடம் சிவன். புனித கங்கைகள் யாவும் சிவனின் சடாமுடியுடன் தொடர்பு கொள்வதால் புனித நதிகளில் இடும் ஆகுதிப் பொருட்கள் யாவும் சிவனைச்

சென்றடையும் என்ற நம்பிக்கை இன்றும் இந்துக்களுக்கு உண்டு.

நீரில்லாவிட்டால் இந்துக்களின் வாழ்வு நாசமாகிவிடும். மழை பெய்யாவிட்டால் ஆறுகள் குளங்கள் கிணறுகள் யாவும் வற்றிவிடும்.

பூசைக்குத் தேவையான இலை வகைகள், மலர்வகைகள் யாவும் காய்ந்து சருகாகிவிடும்.

அபிசேகத்திற்குத் தேவைப்படும் இளநீர், பால், தயிர் போன்றன இல்லாமற் போய்விடும்.

மனிதன் ஆசாரத்தைப் பேணமுடியாது. இறைவனைப் புனிதப்படுத்த முடியாது. கோயில்களில் வழங்கப்படும் தீர்த்தம் நோயைத் தீர்க்கும். திருநீறு மும்மலங்களையும் நீக்கி ஆன்மா இறைவனை அடையச் செய்யும். தீர்த்தமும் திருநீறும் நீரில்லாவிட்டால் கிடைக்காது.

காலையில் எழுந்ததும் காலைக் கடன்களைச் செய்யாது இறைவனை வணங்கமுடியாது. காலைக்கடன்களைச் செய்வதற்கு நீர் வேண்டும்.

மலசலம் கழித்த பின் சௌசம் செய்தல் வேண்டும்.

சௌசம் செய்ய நீர் வேண்டும். சௌசம் செய்த பின் வாயையும், கண்களையும், நாசியையும், காதுகளையும், நகங்களையும் சுத்தி செய்தல் வேண்டும். பல்துலக்கினால் எட்டுத்தரம் வாய் கொப்பளித்தல் வேண்டும். அதன் பின் குளித்தல் வேண்டும். இந்து தர்மம் குளிக்கும் இடங்களைப் பற்றியும் கூறியுள்ளது.

ஆறு, ஓடை, குளம், கேணி, மடு, கிணறு ஆகியவற்றில் ஸ்னானம் செய்யலாம். ஸ்னானம் செய்யுமுன் அணிந்த

ஆடையைக் கசக்கிப் பிழிந்து இரண்டு கைகளையும் கழுவி, உடம்பை நீரினால் கழுவ வேண்டும்.

ஆறு, குளம், கேணி, மடுவானால் தொப்பூழ் அளவு தண்ணீர் இருந்தால் தான் இறங்கி ஸ்னானம் செய்தல் வேண்டும்.

நதியானால் அதற்கு எதிர்முகமாக நின்றும், குளம் முதலியவற்றிலே வடக்கு முகமாக நின்றும் ஸ்னானம் செய்தல் வேண்டும்.

நீரில் முழுகும் போது, இரண்டு காதுகளையும் இரண்டு பெருவிரல்களினாலும், கண்களை இரண்டு சுட்டுவிரல்களாலும், இரண்டு நாசிகளையும், இரண்டு நடுவிரல்களினாலும் மூடிக்கொண்டு சிவபெருமானை மனதில் நினைத்துக் கொண்டு முழுகல் வேண்டும்.

அதன் பின் கரையை அடைந்து உடுத்திருந்த வஸ்த்திரத்தைப் பிழிந்து உடலை உலர்த்துதல் வேண்டும். அதன் பின் காய்ந்த வஸ்த்திரத்தை அணிந்து நீறு பூசுதல் வேண்டும்.

சிலர் நோய் காரணமாக முழுக முடியாவிட்டால் நீரினால் கழுத்தின் கீழே கழுவி, கழுவாத உடம்பின் பகுதிகளை ஈரத்துணியால் துடைத்தல் வேண்டும்.

இதுவும் முடியாதோர் நீரினால் அரையின் கீழ்ப் பகுதியைக் கழுவி, கழுவாது எஞ்சிய உடம்பின் பகுதியை ஈரத்துணியால் துடைத்தல் வேண்டும்.

குளித்த பின் சுத்தமான நீரினால் அனுட்டானம் செய்து பஞ்சாட்சர மந்திரத்தை உச்சரித்தல் வேண்டும்.

போசனம் செய்யுமிடம் எப்பொழுதும் பசுவின் சாணியால் மெழுகப்பட்டிருத்தல் வேண்டும். பசுவின் சாணத்தால் வீட்டை மெழுக நீர் தேவை.

வாழையிலை, பலாவிலை, புன்னையிலை, பாதிரியிலை, தாமரையிலை என்பவற்றில் போசனம் செய்யலாம். போசனம் செய்யுமுன் அவற்றைச் சுத்தமான நீரினால் கழுவுதல் வேண்டும்.

போசனம் செய்யுமுன் சிவனை நினைத்துப் பஞ்சாச்சர மந்திரத்தை செபித்து உண்ணும் உணவின் மீது சுத்தமான நீரைத் தெளித்தல் வேண்டும்.

போசனம் செய்த பின் போசனம் செய்த இலையையும், எஞ்சியுள்ள உணவையும் காகத்திற்கும், பசுவிற்கும் போடலாகாது.

இலையை வீசிய பின் சுத்தமான நீரினால் கைகளைக் கழுவுதல் வேண்டும்.

இரவில் நித்திரை செய்யுமுன் முகம், கை, கால்களைக் கழுவி, விபூதி தரித்துப் பஞ்சாட்சர மந்திரத்தை உச்சரித்தல் வேண்டும்.

சைவ சமயத்தவன் தினமும் சிவனுக்குப் படைக்கப்பட்ட நீரை அருந்துதல் வேண்டும்.

நீரின் புனிதத்தன்மைக்கு வரையறை கூறமுடியாதென்று இந்து தா்மம் கூறுகிறது.

ஒரு பெண் எதிா்பாராத விதத்திலோ, தவறு என்று தெரியாமலோ தனது கற்பை இழந்துவிட்டால், அவள் புண்ணிய நதியில் பதினெட்டுமுறை மூழ்கியெழும்பினால் குற்றம் நீங்கும்.

குழந்தையில்லாதவா்கள் விரதமிருந்து புண்ணிய நதிகளில் மூழ்கியெழுந்தால் குழந்தைச் செல்வம் கிடைக்கும்.

ஒரு வணிகன் தொழிலால் நஷ்டமடைந்தால் நீர்நிலையைக் கடந்து சென்று தொழில் செய்தால் இலாபம் அடைவான்.

அரசன் புனிதமான நீர் நிலைகளைத் தன் கண்களைப் போலப் பாதுகாத்தல் வேண்டும்.

அரசன் நீரைப் பெற்றால் தான் இன்பமாக மக்கள் வாழ்வார். நீரைப்பெற அரசர்கள் வர்ணனைப் போற்ற வேண்டும். வர்ணனைப் போற்றவேண்டுமானால் அரசன் நீதியாக நாட்டை ஆளவேண்டும்.

சாப்பிடும் போது தவிர மற்ற நேரங்களில் இடக்கையால் நீர் அருந்தக்கூடாது.

நீரைப் பெறுவதற்காகக் குளம், கேணி, மடு, கிணறு என்பவற்றை வெட்டும் போது வர்ணனுக்கும் பூசை செய்தல் வேண்டும்.

நீர் கிடைத்ததும் அதைக் குடிக்குமுன் வர்ணனுக்குப் பொங்கிப் படைத்தல் வேண்டும்.

இவ்வாறு இந்து தர்மம் நீரைப் பற்றிக் கூறுகிறது.

நீர் ஓர் இந்துவின் உடலை மட்டுமல்ல மனதையும் சுத்தப்படுத்தும். ஓர் இந்து, கோயிலுக்குச் செல்லும் போது குளித்து, தோய்த்து உலர்ந்த உடைகளை உடுத்திக்கொண்டு தான் செல்ல வேண்டும்.

குளிக்காமல் கோயிலுக்குச் சென்றால் கோயிலின் உள்ளே சென்று வழிபட முடியாது. இந்து ஒருவன் தனது கடமைகள் முழுவதையும் சமய அனுட்டானங்களைப் பின்பற்றியே செய்கிறான்.

குழந்தை பிறந்ததும் நாள் நட்சத்திரம் பார்ப்பது,

அதற்கு முடி வெட்டுவது,

அன்னப் பிரசாதம் செய்வது,

ஏடு தொடக்குவது,

பாடசாலைக்குச் செல்வது,

திருமணம் செய்வது,

சாந்தி முகூர்த்தம் பார்ப்பது,

இறந்தால் பிரேதம் எடுக்க நல்ல நேரம் பார்ப்பது,

வீடு கட்ட நேரம் பார்ப்பது,

இப்படி இந்து ஒருவனின் நாளாந்தச் செயல்கள் யாவும் நாள் நட்சத்திரம் பார்த்த பின்பே செய்யப்படுகின்றன.

இவற்றிற்கெல்லாம் இறைவனைத் தொழமுன் உடலைச் சுத்தப்படுத்த வேண்டும். உடல் சுத்தமில்லாமல் எக்கருமத்தைச் செய்தாலும் அது பூரணமடையமாட்டாதென்று இந்துக்கள் நம்பிக்கை வைத்துள்ளனர். இவற்றிற்கெல்லாம் நீர் தேவை.

இந்துக்களின் சமய வாழ்வோடு இரண்டறக் கலந்தது நீர். நோய் வந்துவிட்டால், வீட்டில் துடக்கென்றால், வீட்டில் கெட்ட தேவதைகள் உலாவுவதாகப் பயந்தால், நாம் ஓர் அந்தணரிடம் சென்று முறையிடுகிறோம். அந்தணர் வீபூதி தருவார். அத்துடன் நீரை எடுத்து மந்திரம் ஓதி அதில் மலர்களையிட்டுத் தருவார்.

அப்புனித நீரைக் கொண்டு வந்து வீட்டில் தெளிப்பதால் வீட்டில் குடிகொண்டிருக்கின்ற துர்த் தேவதைகள் அகன்றுவிடும் என இந்துக்கள் நம்புகிறார்கள்.

நோய் உள்ளவனுக்குத் தெளித்தால் நோய் அகன்றுவிடுமென்று இந்துக்கள் நம்புகிறார்கள்.

பில்லி சூனியம் யாவும் அகன்றுவிடுமென்றும் இந்துக்கள் நம்புகிறார்கள்.

அதைவிடத் துடக்கு, ஆசூசம் யாவும் அகன்றுவிடும் என்று இந்துக்கள் நம்புகிறார்கள்.

பசுவின் சாணத்தை அல்லது பாலில் நீா் கலந்து தெளிக்குமிடமெங்கும் புனிதமாகிவிடும் என்று இந்து சமயம் கூறுகின்றன.

இந்த நம்பிக்கைகள் இன்றும் இந்துக்களிடம் உண்டு.

ஓா் இந்து சமயி உடலால் புனிதமுள்ளவனாக இருந்தால் தான் அவன் மனதால் இறைவனை நினைக்க முடியும்.

ஓா் இந்துவின் உடலைப் புனிதமாக்குவது நீா்.

புனிதமான உடலால் தான் புனிதமான இறைவனை நினைக்க முடியும்.

புனிதமான உடலும், பற்றற்ற மனமும் உடையவன் இறைவனாவான் என்று இந்து தா்மம் கூறுகிறது.

ஓா் இந்து பசுவிற்கு நீா் வைப்பது பெரும் புண்ணியமாகும்.

பசுவிற்குக் கூட நீரை இன்னொருவரிடம் பெற்று வைப்பது கூட இழிவானது என்று வள்ளுவா் கூறுகிறாா்.

1066. ஆவிற்கு நீா்என்று இரப்பினும் நாவிற்கு
இரவின் இளிவந்தது இல்.

பசுவிற்கு நீா் வேண்டும் என்று இரந்து கேட்டாலும் அந்த இரத்தல் நாவிற்கு மிகவும் இழிவானது ஆகும்.

நீா் இன்றி உலகம் இயங்காது. நீா் மனிதன் கண்களால் காணும் தெய்வங்களில் ஒன்று என்று இந்துமதம் கூறுவதிலிருந்து நாம் அதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளலாம்.

“நீயே உனது எதிர்காலத்தைத் தீர்மானிப்பவன்” என்று இந்து மதம் கூறுகிறது. அது எப்படிச் சாத்தியமாகும்?

உனக்கு நோய் வந்துவிட்டது. நீ தான் வைத்தியரை நாடிச்செல்லல் வேண்டும். அவர்தரும் மருந்து வகைகளை நீ தான் சாப்பிடவேண்டும்.

உனது தொழிலை நீ தான் செய்ய வேண்டும். நீ அதைச் சரிவரச் செய்தால் தான் உனக்கு அதற்குரிய வேதனம் வழங்கப்படும்.

நீ தென்னை மரத்தை நட்டு நல்ல முறையில் பராமரித்தால் தேங்காய் தான் காய்க்கும். மாங்காய் காய்க்காது.

இவை யாவும் இயற்கையின் விதிகள். இயற்கையின் விதிகளைப் பேணச் செய்வது தான் சமயத்தின் நோக்கம். வாழ்க்கையின் தத்துவங்களை உணர்ந்து கொள்ளாதவர்களை உணர்ந்து கொள்ளப்பண்ணி, உணர்ந்து கொண்டவர்களை மேலும் மேலும் அவற்றை இறுக்கமாகக் கைக்கொள்ளச் செய்வதே மதம்.

உன்னால் செய்ய முடியாத காரியங்கள் எதுவும் இருப்பதாக எண்ணாதே. நம்பிக்கைவை; முயற்சி செய்; கடவுளை நம்பு. அதன் பின் எதையும் நீ செய்வாய்.

வாழ்க்கையில் மனித மனங்களுக்கோ அல்லது உடல்களுக்கோ பலவீனத்தை உண்டுபண்ணும் எந்தக் கருத்தையும் இந்து மதம் சொன்னதில்லை. மனிதனிடம் இயற்கையாகப் பொதிந்திருக்கும் ஆற்றலைச் செப்பனிட்டு வெளிப்படுத்தி உலகிற்குப் பயனுறச் செய்தல் வேண்டும் என்பதில் இந்து மதங்கள் மிகுந்த அக்கறை காட்டுகின்றன.

சமய அனுட்டானங்களைப் பின்பற்றுவதன் மூலம் மனித மனத்திற்கு நிம்மதியைத் தேடிக் கொடுப்பதே இந்து சமயங்களின் அடிப்படை இலட்சியமாகும். ஒருவன் சமயியாக வாழ்வதன் மூலம் உலகில் உள்ள இன்பங்களையெல்லாம் அவன் வாழும் இப்பிறப்பிலேயே அனுபவிக்க வேண்டும். அதன் மூலம் அவன் மறுமையிலும் இன்பமாக வாழவேண்டும் என்று போதிப்பது இந்துமதம்.

ஒழுக்கம் உள்ளவனாக வாழ்; தைரியம் மிக்கவனாக வாழ்; நம்பிக்கை உடையவனாக வாழ்; சுய நலம் இல்லாதவனாக வாழ்; உதவி செய்து வாழ்; ஆசைப்படாது வாழ்; அப்படி வாழ்ந்தால் உன்னால் பாவம் செய்ய முடியாது. பாவம் செய்யாத மனிதனின் மனத்தில் என்றும் மகிழ்ச்சி பொங்கிக் கொண்டே இருக்கும்.

ஒருவன் அனுபவித்துக் கொண்டிருக்கும் இன்பம், அவனது முயற்சியால் வந்தது. அந்த இன்பத்தைப் பெருக்க வேண்டுமானால் தர்மமான முறையில் மேலும் மேலும் முயற்சிக்க வேண்டும். அதர்மமான முறையில் நீ முயற்சித்தால் உனக்கு ஆபத்துக்களும், துன்பமும் ஏற்படும். இன்பத்தையும் துன்பத்தையும் உனக்கு நீ தான் உண்டாக்குகிறாய் என்று நீ நினைத்தாயானால் உன்னால் தீயவற்றை விலக்கிக் கொள்ள முடியும். உன்னிடத்தில் உள்ள வலிமையின் தன்மையை நீ உணர்ந்துகொண்டால் உன்னைவிட உயர்ந்த ஆத்மா வேறெதுவும் இல்லை என்பதைப் புரிந்து கொள்வாய்.

பகவத்கீதையின் ஆறாவது அத்தியாயமான தியான யோகத்தின் ஐந்தாவது சுலோகத்தில் மஹா விஷ்ணு அருச்சுனனுக்கு இவ்வாறு கூறுகிறார்.

“அர்ச்சுனா, தன்னைத் தானே உயர்த்திக் கொள்ளல் வேண்டும். தன்னைத் தான் இழிவுபடுத்தலாகாது. ஏனென்றால் தானே தனக்கு நண்பன்; தானே தனக்குப் பகைவன்”

ஆறாவது சுலோகம் இவ்வாறு கூறுகிறது; “தன்னைத் தான் வென்றவனுக்குத் தானே உறவினன். தன்னைத் தான் வெல்லாத ஆத்மா தனக்குத்தானே பகையைச் சூழச் செய்யும்”

இந்து தர்மம் ஒருவன் முழு ஆற்றலும் உள்ளவன் என்று கூறி, அவ் ஆற்றலை வளப்படுத்துகிறது. அவ்வாற்றல் மூலம் மகத்தான காரியங்களைச் செய்யவே ஒவ்வொரு உயிரையும் இறைவன் படைத்ததாகக் கூறுகிறது.

இதை விளக்க யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த ஒரு பெரியவரைப் பற்றி கூறுகிறேன்.

இந்துபோட் இராஜரட்ணம் அவர்களை அறியாத இந்து ஒருவன் இருக்கமாட்டான்.

சுப்பிரமணியம் மீனாட்சிப்பிள்ளை தம்பதிகளின் நான்காவது மகன் இராஜரட்ணம்.

இவர் 1884ஆம் அண்டு ஆடி மாதம் நான்காம் திகதி கோப்பாயில் பிறந்தார்.

இளமையில் விருப்புடன் கல்வி கற்ற இராஜரட்ணம் அவர்கள் கற்றுச் சட்டத்தரணியானார்.

சைவப் பெரியார் சேர் பொன் இராமநாதன் அவர்களின் தலைமையில் 1923ஆம் ஆண்டு மார்கழி மாதம் ஒன்பதாந் திகதி சைவவித்தியா விருத்திச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. அவரோடு இணைந்து திரு. இராஜரட்ணம் அவர்கள் செயற்பட்டார்.

அக்காலகட்டத்தில் கிறீஸ்தவ மிசன்கள் கிறிஸ்தவப் பாடசாலைகளை அமைத்து சைவ மக்களை மதம் மாற்றி அவர்களின் பிள்ளைகளைக் கற்பித்ததோடு பாடசாலைகளில் உணவும் கொடுத்தனர்.

இந்நிலையில் ஏராளமான மக்கள் கிறிஸ்தவ சமயத்திற்கு மாறினார். அத்துடன் கிறிஸ்தவ மிசன்கள் கிறிஸ்தவ ஆசிரிய கலாசாலைகளை உருவாக்கிச் சைவர்களைக் கிறிஸ்தவர்களாக மாற்றி அவர்களுக்கு ஆசிரியப் பயிற்சி அளித்து, அவர்களுக்கு ஆசிரிய நியமனங்களும் வழங்கின.

உத்தியோக மோகம் கொண்ட பலர் மதம் மாறி உத்தியோகங்களைப் பெற்றனர். பலர் கிறிஸ்தவப் பாடசாலை களிலும், கிறிஸ்தவ ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலும் சேர்ந்தனர்.

இதைக்கண்ட மகான் இராஜரத்தினத்தின் மனம் வெந்தது. இதற்கொரு முடிவுகாண வேண்டுமெனத் துடித்தார். பெரும் வருமானத்தைக் கொடுத்த சட்டத்தரணி பதவியைத் தூக்கி எறிந்துவிட்டு சைவசமயத்தின் எழுச்சிக்காக வீறுடன் புறப்பட்டார்.

கங்கையைப் போல பொங்கிய உள்ளம் செயற்படத் தொடங்கியது.

பல்வேறு சைவப்பெரியார்களின் உதவியுடன் இலங்கை யில் சைவமக்கள் வாழும் பகுதிகளெங்கும் பாடசாலைகளை நிறுவினார்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மலையகமெங்கும் 187 சைவப்பாடசாலைகளை அவ்வூர்களின் வாழ்ந்து வந்த சைவப் பெரியார்களின் உதவியுடன் நிறுவினார். இப்பாடசாலைகளில்

முப்பத்தையாயிரம் மாணவர்கள் கல்வி கற்றனர். இப்பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குப் பயிற்சி கொடுப்பதற்காகத் திருநெல்வேலியில் சைவ ஆசிரியகலாசாலை ஒன்றை நிறுவினார். இதில் 1500 ஆசிரியர்கள் பயிற்சி பெற்றனர்.

சைவப்பாடசாலைகள் பெருவளர்ச்சியடைந்து நல்ல முறையில் நடைபெற்றதால் உத்தியோகத்திற்காகக் கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்து அருட்தந்தையாக இருந்த ஒருவர் இராசரத்தினம் அவர்களைச் சந்தித்து தான் மீண்டும் சைவனாக மாற விரும்புவதாகத் தெரிவித்தார். அவரது மனமாற்றத்தை மகிழ்வுடன் ஏற்ற இராசத்தினம் அவர்கள் அவரைக் கீரிமலைப் புனித தீர்த்தத்திற்கு அழைத்துச் சென்று, புனித தீர்த்தத்தில் நீராடச் செய்து, நீறு கொடுத்துப் பூசச் செய்து சைவனாக்கினார்.

செலவையும் சிரமத்தையும் பாராது தான் நிறுவிய அனைத்துப் பாடசாலைகளுக்கும் அடிக்கடி சென்று அவற்றின் குறை நிறைகளைக் கவனித்து வந்தார்.

சைவப்பாடசாலைகளில் கற்றவர்களுக்குத் தொழிற் பயிற்சி கொடுப்பதற்காக இரண்டு தொழிற்பயிற்சிப் பாடசாலைகளை நிறுவினார். அங்கு அவர்களது வாழ்க்கைக்குத் தேவையான பயிற்சிகள் வழங்கப்பட்டன.

நன்கு கற்றறிந்தவர்கள் தம்முடைய உயர்விற்குக் காரணமான கல்வியைப் பிறருக்கும் கொடுத்து அவர்களும் உயர்வடைய வேண்டுமென்று விரும்புவார்கள் என்று நீதி நூல்கள் கூறுவதை நன்கு அறிந்த இராசரத்தினம் என்ற மகான் சாதி பேதம் பாராது இலங்கையில் வாழ்ந்த சைவச் சிறார்களுக்குக் கல்வியூட்டினார்.

அவர் ஊட்டிய கல்வி தான் யாழ்ப்பாணத் தமிழரை உலகம் வியக்கும்படி செய்து, இன்றும் நிலைத்து வாழவைத்துக்கொண்டிருக்கிறது. அன்று அவர் நாடு பூராகவும் 187 பாடசாலைகளை நிறுவிப் பாதுகாக்காது விட்டிருந்தால் தமிழரில் அரைவாசிப் பேருக்கு மேல் கல்வி கற்றிருக்க மாட்டார்கள்.

அவர் நிறுவிய பாடசாலைகள் பலவும் இன்று நாடெங்கிலும் புகழ்பூத்த பாடசாலைகளாகத் திகழ்வதை நாம் கண்ணாரக் கண்டுகொண்டிருக்கிறோம். தமிழ் மக்களின் இரத்தத்தோடு இரத்தமாகக் கலந்து கொண்டிருக்கும் இராசரத்தினம் ஐயா அவர்கள் பொருளை விரும்பியதில்லை; பாராட்டுக்களை விரும்பியதில்லை; புகழை விரும்பியதில்லை.

அவரைப் பற்றிய எந்தச் செய்தியும் அவர் வாழ்ந்த காலத்தில் பத்திரிகைகளில் வந்ததில்லை. அவரைப்பாராட்ட வேண்டுமென்று எத்தனையோ பிரமுகர்களும் சங்கங்களும் விரும்பியபோதும் அவர் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. ஒரு பிள்ளை உரிய வயதில் பாடசாலைக்குச் செல்லாவிட்டால் அவரது நெஞ்சு வெடித்துவிடும்.

ஊரில் உள்ளவர்கள் அனைவரும் கற்கவேண்டும் என்று விரும்பினார்.ஊர் ஊராகச் சென்று வீடு வீடாகப் பாடசாலைக்குச் செல்லாத பிள்ளைகள் இருக்கிறார்களா என்று தேடினார்.

பெற்றோர் இல்லாத பிள்ளைகள், அங்கவீனமான பெற்றோர்க்குப் பிறந்த பிள்ளைகள், வறிய பெற்றோரின் பிள்ளைகள் பாடசாலைகளுக்குச் செல்லாமல் இருப்பதைக் கண்டு துடிதுடித்தார். அவர்களைப் பாடசாலைக்கு அனுப்ப வேண்டும் என்பதற்காக வித்தியா விருத்திச் சங்கத்தின் சார்பாக முத்துத்தம்பி வித்தியாலயத்தை ஆரம்பித்தார். அங்கு

பிள்ளைகள் நிரந்தரமாகத் தங்கி பயில்வதற்குச் காப்பகம் ஒன்றையும் அமைத்தார். அக்காப்பகத்தில் தங்கியிருந்த பிள்ளைகளினது அனைத்துச் செலவுகளையும் தானே ஏற்றார்.

மயிலிட்டியிலும், கோப்பாயிலும் ஏராளமான விளை நிலங்களும் குடிநிலங்களும் அவருக்கு இருந்தன. அவரின் மனைவி பெரும் நிலச்சுவாந்தரின் மகள். பாடசாலையின் தேவைகளுக்காக ஒவ்வொரு நிலமாக விற்று வந்தார். இறுதியில் அவர் குடியிருந்த வாடகை வீட்டையும் அவரின் மைத்துனர் விற்றுவிட்டார். வீட்டாரை நேசிப்பதை விட அவர் முத்துத்தம்பி வித்தியாலயத்தின் சைவச்சிறுவர் இல்லத்தையே கூடுதலாக நேசித்தார்.

அப்பாடசாலையில் ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்றனர். அதில் இரு நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் விடுதியில் தங்கியிருந்து கற்றனர். அப்பாடசாலை ஆரம்பமான நாளில் இருந்து இன்று வரை பாடசாலையின் விடுதியில் தங்கியிருந்து மாணவர்கள் கல்வி கற்று வருகிறார்கள்.

1958ஆம் அண்டு ஏற்பட்ட இனக்கலவரத்தினால் பாதிக்கப்பட்ட அறுநூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் பரந்தன் முல்லைத்தீவு வீதியில் உள்ள காணிகளில் குடியேறினர். அவர்களின் பிள்ளைகள் கற்க வசதியின்றி இருந்ததைக் கண்டு துடிதுடித்த ஐயா ஒரு வாகனத்தைக் கொள்வனவு செய்து அப்பிள்ளைகளை அதில் ஏற்றி முரசுமோட்டையில் இயங்கிய அரச பாடசாலையொன்றிற்குத் தினமும் அனுப்பிக் கல்வி கற்பித்தார். பின்பு தருமபுரம் என்ற இடத்தில் ஒரு பாடசாலையை 1958ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 17ஆந் திகதி நிறுவினார்.

எந்தச் சாதியில் பிறந்தாலும் அவன் சைவனாக இருந்தால் தனது பாடசாலையில் சேர்ப்பார்; விடுதியில் தங்க வைப்பார்; அவர்களோடு அமர்ந்திருந்து உணவு உண்பார். இவற்றைக் கண்ட பண்டிதர் நாகலிங்கம் என்பவர் அவரைப் புகழ்ந்து பாராட்டினார். அப்பாடல் இது

"திருவுங் கல்வியுஞ் சீருந் தழைக்கவோர்
உருவுகொண் டுதித்த வுத்தமன் மன்னே
கல்விக் கழகம் இல்லா விடந்தொறும்
பற்பல வாக்கிப் பரிபா லித்தே
ஆசிரி யத்தொழி லாற்றப் பலரை
நேசத் துடன்நிய மித்தவன் மன்னே.
அன்னை தந்தை யற்றவர்க் கெல்லாம்
அன்னைநய் தந்தையுந் தானே யாகி
உண்டியு முறையுளு முவந்த கல்வியும்
கொண்டினி துயரப் புரிந்தவன் மன்னே.
சைவந் தழைக்கவுந் தண்டமிழ் தழைக்கவும்
வையம் வாழ்த்தவும் வந்தவதரித்த
இராச ரத்தின இன்மொழி வள்ளல்
அராவணி சடையோ னற்புதத் திருவடி
பரவிடச் சென்றனன் பார்தொழ வினிதே".

பல்லாண்டு காலம் அழிவில்லாது இயங்கி, இன்றும் நலிந்தோர்க்கு அட்சய பாத்திரமாகத் தினமும் சைவவித்தியா விருத்திச் சங்கத்தை ஆரம்பித்த மகானை உலகில் யாரோடும் ஒப்பிட முடியாது.

சாதிக்குரிய வரன்முறைகளைப் பின்பற்றாததால் பலர் அவரைப் புறக்கணித்த போதும், அவர் மகா மேரு மலையைப்

போலப் பலம் மிக்கவராக இருந்தார். அவரை யாராலும் வெல்ல முடியவில்லை. ஏழு பாடசாலைகளும், அதிபர்களது வீடுகளும் உயர்சாதியினர் என்று கூறிக்கொள்பவர்கள் தீமூட்டி அழித்த போதும் அவர் அஞ்சவில்லை.

தான் பிறந்த சமயமான சைவ சமயத்தில் பிறந்த அனைவரினதும் நல்வாழ்விற்காகத் துன்பங்களையெல்லாம் தாங்கிக் கொண்டு தனது கடமைகள் அனைத்தையும் இறைவனைப் போலச் செய்தவர் இராசரத்தினம்.

இத்தகைய தைரியம் மிக்க செயல்வீரனாக இவர் இருந்தமையால் தான் இன்று இந்துக்கள் தலை நிமிர்ந்து வாழ்கின்றனர்.

ஒருவனின் தூய்மையான வாழ்வு அச்சமூகத்தின் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும். இந்து போட் இராசரத்தினம் அவர்களின் தூய்மையான வாழ்வு இன்றும், எதிர் காலத்திலும் சைவமக்கள் பேரோடும் புகழோடும் வாழ வைக்கும் என்பதில் ஐயம் எதுவுமில்லை.

இந்து மதம் ஓர் ஆத்மாவுக்குத் துன்பம் உண்டாவதை விரும்புவதில்லை. தற்செயலாக அவ் ஆத்மாவுக்குத் துன்பம் ஏற்பட்டால் அதை நிவர்த்தி செய்யவே விரும்புகிறது. அதற்காகத்தான் பெரியவர்களை, ஞானிகளை, முனிவர்களை எல்லாம் இறைவன் படைத்தார். இவர்கள் தாம் பெற்ற இன்பத்தை எல்லோரும் பெறவேண்டுமென்ற நோக்கில் அரிய பல நூல்களை இயற்றினார். சிலவேளைகளில் இறைவனே பிறந்து உலக மக்களின் நல்வாழ்விற்காக பல அரிய நூல்களை எழுதினார். இதற்கு உதாரணமாக வேதங்களையும், உபநிடதங்களையும் மகா பாரதக் கதையையும் கூறலாம்.

மகாபாரதத்தை வேதவியாசர் சொல்லச் சொல்ல மகா கணபதி தனது கொம்பை முறித்து எழுதினார் என்று வரலாறு கூறுகிறது. அதை எவரும் மறுக்கவில்லை. அதைவிடத் திருக்குறளைப் பற்றி சரஸ்வதிதேவி பின்வருமாறு கூறியதாக பழந்தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன.

“நாடா முதல் நான் மறை நான்முகன் நாவில்
பாடா இடைப்பா ரதம் பகர்ந்தேன் கூடாரை
எள்ளிய வென்றி இலங்கிலைவேல் மாதர்பின்
வள்ளுவள் வாயது என் வாக்கு”

இந்து தெய்வமான சரஸ்வதி வள்ளுவன் சொன்னது தான் சொன்னது என்று கூறுகிறாள். வேதங்கள், உபநிடதங்கள், ஆகமங்கள் யாவும் நல்லபடி வாழும் முறைகளைத் தத்துவமாகக் கூறியுள்ளன. அவற்றைப் புராணங்கள் கதைவடிவில் கூறியுள்ளன.

பெரியபுராண நாயகர்கள் அவற்றை வாழ்ந்து காட்டியுள்ளனர். ஆறுமுகநாவலர், மகான் இராசரத்தினம் ஐயா, சேர் பொன் இராமநாதன், விபுலானந்தர் போன்ற மகான்கள் நமக்கு முன் தோன்றி முன்னுதாரண புருஷர்களாக வாழ்ந்து காட்டியிருக்கிறார்கள்.

இவர்களின் வாழ்க்கையைப் படித்தால் நாமும் அப்படி வாழவேண்டும் என்ற எண்ணம் உருவாகும்.

493. ஆற்றாரும் ஆற்றி அடுப, இடன் அறிந்து
துன்னியார் துன்னிச் செயின்.

தமக்கு ஏற்ற இடத்தை அறிந்து, தம்மைக் காத்துக் கொண்டு, பகைவரைத் தாக்கினால், வலிமை இல்லாதவனும் வலிமை பெற்று வெற்றியடைவான்.

501. அறம்பொருள் இன்பம் உயிர் அச்சம் நான்கின்
திறம்தெரிந்து தேறப்படும்.

அறம்,பொருள்,இன்பம், உயிருக்காக அஞ்சுகின்ற அச்சம் ஆகிய நான்கு வகைகளாலும் ஆராயப்பட்ட பின்பே ஒருவன் தொழிலுக்குத் தகுதியானவன் தானா என்று தெரியப்படுவான்.

506. அற்றாரைத் தேறுதல் ஓம்புக; மற்று அவர்
பற்றிலர்; நாணார் பழி.

தனது சுற்றத்தவர்களோடு தொடர்புகள் இல்லாதவரை நம்பி நடக்கக் கூடாது; அவர் உலகத்தில் பற்றில்லாதவராகையால் பழிக்கு அஞ்சமாட்டார்.

513. அன்பு அறிவு தேற்றம் அவாஇன்மை இந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு.

அன்பு, அறிவு, ஐயமில்லாமல் தெளியும், ஆற்றல், அவா இல்லாமை ஆகிய நான்கு குணங்களை நிலையாக உடையவனையே நம்பித் தெளியலாம்.

522. விருப்புஅறாச் சுற்றம் இயையின் அருப்புஅறா
ஆக்கம் பலவும் தரும்.

அன்பு நீங்காத சுற்றம் ஒருவனுக்குக் கிடைத்தால், அது மேன் மேலும் வளர்ச்சி குறையாத ஆக்கங்கள் பலவற்றையும் அவனுக்குக் கொடுக்கும்.

535. முன்னுறக் காவது இழுக்கியான் தன்பிழை
பின்ஊறு இரங்கி விடும்.

வரும் துன்பங்களை முன்பே அறிந்து காக்க மறந்தவர்கள், பின்பு அவை வந்த போது தமது தவறை உணர்ந்து வருந்துவர்.

பெரியவர்களாக வாழ்ந்தவர்கள் அனைவரும் வள்ளுவன் சொன்ன குறள்களைப் பின்பற்றி நடந்தவர்களே.

இந்து மதத்தில் உள்ள நூல்கள் அனைத்தும் கூறுவதை வள்ளுவன் தனது குறள்கள் மூலம் கூறியுள்ளான். அந்த அரிய பொக்கிசத்தை எடுத்து வாசித்துப் பாருங்கள். உலகம் உங்களது கைக்குள் வந்துவிடும்.

எப்பொழுதும் உயர்வாக எண்ணுங்கள். நீங்கள் நினைக்கின்ற அளவு உயர்வு உடனே கிடைக்காவிட்டாலும் பின்பு கட்டாயம் கிடைக்கும்.

சோம்பல் தான் மனிதனின் முதலாவது எதிரி. நாட்டை ஆள்கின்ற மன்னனது நட்பு ஒருவனுக்குக் கிடைத்தாலும் அவன் சோம்பேறியாக இருப்பானானால் அந்த நட்பால் அவன் பயனடையமாட்டான்.

இந்து தர்மம் நீ தான் உனது எதிர்காலத்தைத் தீர்மானிப்பவன் என்று மட்டும் கூறவில்லை. உனது செயல்களால் நீயும் உனது சுற்றமும், சமூகமும் பயனுறும். பின் நாளில் உலகே உன்னால் பயனுறும். என்று கூறுகிறது.

இது எவ்வளவு உண்மை என்று புராணங்களைப் படித்தவர்களுக்குத் தெரியும். நன்றாக நீ வாழ்ந்தால் உன்னைச் சுற்றியுள்ளவர்களும் நன்றாக வாழ்வார்கள்.

சுவாமி விவேகானந்தர் இவ்வாறு கூறுகிறார்.

“தன்னம்பிக்கை கொண்டிருந்த ஒரு சிலரின் வரலாறே உலக சரித்திரமாகும். அத்தகைய நம்பிக்கை, உள்ளேயிருக்கும் தெய்வீகத்தை வெளியே வரவழைக்கிறது. நீ எதையும் சாதிக்க முடியும். அளவுகடந்த ஆற்றலை வெளிப்படுத்தப் போதுமானளவிற்கு உண்மையாக நீ முயற்சி செய்யாத போது தான் தோல்வி அடைகிறாய். ஒரு மனிதனோ ஒரு நாடோ நம்பிக்கை இழந்தவுடனேயே அழிவு வருகிறது”

விவேகானந்தரை வீரத்துறவி என்பார்கள். அவரின் தன்னம்பிக்கையும் முயற்சியும் தான் அவரின் வாழ்வையும், இந்திய மக்களின் வாழ்வையும் மேம்படுத்தியது. பின் அது உலகளாவிய ரீதியில் இனமத பேதங்களற்று சகல மனித மனங்களையும் ஆட்கொண்டது.

இந்து மதங்கள் பிறப்பைப் பற்றிக் கூறுகின்றன. ஒரு பிறப்பில் செய்த வினைகள் முடிவுக்கு வராவிட்டால் அவ்வினைகள் தொடர்ந்தும் அவ்வுயிர்களை வருத்தும் என்று சொல்கின்றன.

மனிதப் பிறப்பைப் பெற்றவர்கள் தமது அறிவின் மூலமும், பெரியவர்கள் கூறிய படியும் நடந்தால் கன்ம வினைகளைக் குறைத்து முத்தியின்பத்தைப் பெறலாம் என்று இந்து மதங்கள் கூறுகின்றன. அதுபோல அறிவைப் பயன் படுத்தாது, பெரியவர்கள் கூறியவற்றையும் பொருட் படுத்தாது தீயவழிகளைப் பின்பற்றிவாழ்வோர் எப்பொழுதும் துன்பத்தையே அடைவார்கள் என்றும் இந்து மதம் கூறுகிறது.

உனது வாழ்க்கை முறைகளைப் பொறுத்துத்தான் உனது வாழ்வு அமையும். வாழ்க்கை விதியல்ல. மதி என்பதைப் புரிந்து கொள்பவர்கள் தமது வாழ்க்கையைத் தாமே உருவாக்கிக் கொள்வார்கள்.

தெய்வத்தால் செய்ய முடியாத உதவியைக் கூட தன் முயற்சியால் பெறலாம் என்று வள்ளுவன் கூறுகிறான்.

619. தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.

இதுதான் இந்து மதம். கடவுளை மனிதனோடு சேர்த்து வைத்துள்ளது; மனிதனோடு வாழவைத்துள்ளது; தெய்வத்தின்

உதவியில்லாவிட்டாலும் முயற்சியால் முன்னேறமுடியும் என்ற தத்துவத்தைக் கூறுகிறது.

இதற்காகத்தான் "செய்யும் தொழிலே தெய்வம்" என்று எம் ஆன்றோர் கூறினர். நீயே உனது வாழ்க்கையைத் திட்டமிடு; முயற்சி செய்; முன்னேறு. அதனால் சமூகமும் முன்னேறட்டும்.

உனக்கு உதவுவதற்குக் கடவுளைத் தவிரவேறு யாரும் வரமாட்டார்கள். உன்னிடம் பொருளிருந்தால் சுற்றம் சூழும். குளம் நிறைந்தால் உயிரினங்கள் யாவும் தேவை கருதி அங்கு கூடும். மரம் பழுத்தால் பறவைகளை அழைக்கத் தேவையில்லை. குளம் வற்றினால் உயிரினங்களைக் காணமுடியாது. மரத்தில் பழங்கள் இல்லாவிட்டால் கல்லெறியக் கூட ஆட்கள் இராது.

அதனால் பணம் வரும் போது வந்து சேர்வோரை நம்பாது உனது அறிவைப் பயன்படுத்தி வாழப்பழகு.

வேடதாரிகள் வேதகாலத்திலும் இருந்துள்ளனர். பலவீனம் கொள்ளக்கூடாது. உனது பலவீனத்தைப் பயன்படுத்தி உன்னை வெல்லப் பலர் காத்திருக்கிறார்கள். மெய்ப்பொருள் நாயனார் என்ற புகழ் மிக்க அரசனை முத்தன் என்ற அயல்நாட்டு மன்னனால் வெல்ல முடியவில்லை. மெய்ப்பொருள் நாயனார் சிவபக்தர். திருநீறு அணிந்தவர்களைக் கண்டால் அவர்களைச் சிவனென நினைத்து வழிபடும் குணமுடையவர். அதனால் முத்தன் நீறணிந்து சிவனடியார் போல வந்து மெய்ப்பொருள் நாயனாரைக் கொன்றான்.

சிவவேடம் தாங்கி வருபவர்களையும் அவர்களது வேடத்தைக்கொண்டு கணிப்பிடக்கூடாது என்கிறது இந்து மதம்.

பொருள் சேர்ந்தால் பலரும் சேர்வார்கள். முக்கியமாக பெண்கள் பலர் காமுறுவார்கள். உனது மனைவியை மட:டும் நேசி; அவளோடு மட்டும் உறவு கொள். பொருளாசையால் உன்னை நாடி வரும் பெண்கள் உனது பொருட்களைக் கவர்வதிலேயே கவனமாக இருப்பார்கள். உன்னிடம் பொருள் இல்லாவிட்டால் அவர்கள் பொருள் உள்ளவனை நாடிச்சென்று விடுவார்கள். அதனால் பெண்கள் விஷயத்தில் மிகவும் அவதானமாக இருத்தல் வேண்டும்.

''ஆவதும் பெண்ணால், அழிவதும் பெண்ணால்'' என்றொரு முதுமொழி உண்டு. பெண்ணின் சிரிப்பு, நடையுடை பாவனை என்பவற்றிற்கு உள்ள சக்தி உலகில் உள்ள எந்தப் பொருளுக்கும் இல்லை என்பதை உணர்ந்துகொள்ளல் வேண்டும். நல்லவர்களை எப்பொழுதும் இறைவன் சோதனைக்கு -ள்ளாக்குவான். இதன் மூலம் உலகிற்குத் தர்மநெறி போதிக்கப்படும். அரிச்சந்திரன் பட்ட துயரம் யாவருக்கும் தெரியும்.

சிறுத்தொண்டர் நாயனாரிடம் அவரது ஒரேயொரு மகனை அரிந்து கறி சமைத்துத் தரும்படி கேட்டு அவரைச் சோதித்தவர் சிவபெருமான்.

பொருள் சேர்த்தவர்களையும், சமூகத்திற்கு நற் செயல்களைச் செய்பவர்களையும் கடவுள் மட்டுமல்ல உலகில் வாழும் பலரும் சோதிப்பார்கள்; துன்பத்தைத் தருவார்கள். இவற்றையெல்லாம் உறுதியான மனமுள்ளவர்களால் தான் தாங்கிக் கொண்டு முன்னேற முடியும். இப்படியான மனோ தைரியமுள்ளவர்கள் தான் தமது வாழ்க்கையையும் நிர்ணயித்து நாட்டின் போக்கையும் நிர்ணயிக்கிறார்கள்.

இனி உங்கள் வாழ்வை ஆரம்பியுங்கள். நீங்களும் உயர்ந்து, சமூகத்தையும் உயர்த்துங்கள்.

செய்யக்கூடாதனவென்று இந்து தர்மம் விலக்கியவற்றை இந்து தர்மத்தைக் கடைப்பிடிக்கும் பலர் கைக்கொள்கிறனர். இதனால் அவர்களை இந்துக்கள் எனலாமா....?

கல்வி கற்காதவர்கள் இயற்கைக்குப் பயப்படுகிறார்கள்; பெரியவர்களுக்குப் பயப்பிடுகிறார்கள்; பெற்றோருக்குப் பயப் படுகிறார்கள்; வயதில் மூத்தவர்களுக்குப் பயப்படுகிறார்கள்; இதைவிட மனச்சாட்சிக்குப் பயப்படுகிறார்கள்; இவையெல்லா வற்றையும் விடக் கடவுளுக்குப் பயப்படுகிறார்கள்.

கற்றவர்களில் பெரும்பாலானவர்கள் அவற்றிற்கெல்லாம் பயப்படுவதில்லை. தான் கற்ற கல்வியைக் கொண்டு எப்படிப் பிழைக்கலாமென நினைக்கிறார்கள்.

எனக்குத் தெரிந்த ஒருவர் நியாயவாதி. சட்டத்தில் உள்ள ஓட்டைகளைக் கண்டுபிடித்து அவற்றினூடாகச் சமூக விரோதச் செயல்களைச் செய்வோரைக் காப்பாற்றி வந்தார்.

கள்ள உறுதி எழுதுவதில் அவர் மன்னர்; பொய் வழக்குப் பேசுவதில் அவர் சூரர். ஏராளமான சொத்திருந்தும் அவர் தனது தீயசெயல்களைக் கைவிடவில்லை.

அவருக்கு ஐந்து பிள்ளைகள். அவர்களெல்லோரும் கற்றுத் திறமைசாலிகளாக வந்தபோதும், அவர்களைச் சமூகம் மதிக்கவில்லை. ஒருவர் வைத்தியர். அவருக்கு மனநோய். இன்னொருவர் பொறியியலாளர். விடிந்தது முதல் இரவு பத்து மணிவரை குடிப்பார்; குடித்துக்கொண்டே இருப்பார்.

மகளொருத்தி திருமணம் செய்யவில்லை. இன்னொரு மகளின் கணவன் திருமணமான சில நாட்களுக்குள்  விபத்தில் இறந்து விட்டான்.

பெற்றோர் செய்த தீவினைகள் பிள்ளைகளைச் சேர்வதில்லை. ஒவ்வொரு உயிரும் செய்த பாவங்களுக் கேற்பவே பிறவி எடுக்கின்றன. அதனால் பாவம் செய்த பெற்றோரிடத்து அவை பிறக்க, பெற்றோர் தாம் செய்த பாவத்தை அவை மூலம் அனுபவிக்கிறார்கள்.

ஒவ்வொருவரும் செய்த பாவம் என்று குறிப்பிடும் போது அவர்களை அறியாமல் செய்த பாவங்கள் கணக்கில் எடுக்கப்படுவதில்லை. அறிந்து செய்யும் பாவங்கள் தான் கணக்கிடப்படுகின்றன.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சுபாவம் உண்டு. அதை மாற்றுவது கடினம். இதை விளக்க இராமகிருஷ்ணபரமகம்ஷர் கூறிய கதையொன்று நினைவுக்கு வருகிறது.

ஒரு கிராமத்தில்  மீன்விற்கும் பெண்கள் சிலர் இருந்தனர். அவர்கள் தினமும் பட்டணத்திற்குச் சென்று மீன் வாங்கி விற்பது வழக்கம்.

ஒரு நாள் இரவு அவர்கள் மீன்களை விற்றுவிட்டுக் கிராமத்திற்குத் திரும்பிக் கொண்டிருக்கும் போது பெருமழை பெய்தது.

அதனால் அவர்கள் ஒரு வீட்டில் ஒதுங்கினர். அது பூக்கள் விற்பவனின் வீடு. அதனால் அவர்கள் மீன்கொண்டு சென்ற கடகங்களை வெளியே வைத்தனர். வீட்டுக்காரன் அவர்களுக்கு அணியச் சேலை கொடுத்தான். மழை அதிகரித்தது. அதனால் இரவுணவு கொடுத்து அங்கு இரவு தங்கச் சொன்னான்.

பூ விற்பவனின் வீட்டில் சந்தனம் மணத்தது; வாசனைத் திரவியங்கள் நறுமணம் வீசின; பூக்களிலிருந்து வாசம் வந்தது. இவற்றை அந்த மீன்விற்கும் பெண்களால் சகித்துக் கொள்ள முடியவில்லை. அந்த நறுமணம் அவர்களது வயிற்றைப் புரட்டியது. நித்திரை கொள்ளாமல் அவர்கள் தவித்தனர். அதனால் அவர்களுடன் வந்த பெண் ஒருத்தி வெளியே இருந்த மீன்கொண்டு சென்ற கடகத்தை எடுத்து வந்து தமக்கருகில் வைத்தாள். அந்த மணம் அப்பெண்களின் மனத்தை ஈர்த்தது. அவர்கள் உடனே நித்திரையாகி விட்டார்கள்.

இப்படிப் பழக்க தோசத்தால் தவறு செய்பவர்கள் இருக்கிறார்கள்; தீமை செய்வதால் தான் பொருள் கிடைக்கும் அதன் மூலம் இன்பமாக வாழலாம் என்று நினைப்பவர்கள் இருக்கிறார்கள். பிறரின் வேண்டுகோளுக்காகத் தவறு செய்பவர்கள் இருக்கிறார்கள்.

மனிதரில் இப்படிப் பலர் இருக்கிறார்கள். சிலவற்றை செய்யக்கூடாது என்று இந்து சமயம் கண்டிப்புடன் கூறுகிறது. சிலவற்றை இப்படித்தான் செய்யவேண்டும் என்று கூறுகிறது.

பஞ்சமா பாதங்களைச் செய்யக் கூடாது என்று கூறுகிறது.

கடவுளை கிழக்கு முகமாக நின்று ‘சிவசிவ’ என்று சொல்லி வலக்கையின் நடுவிரல் மூன்றினாலும் நீறு தரிக்க வேண்டும் என்று கூறுகிறது. அத்துடன் விபூதியைப் பட்டுப் பையில் அல்லது சம்புடத்தில் வைத்திருத்தல் வேண்டும் என்று கூறுகிறது.

அதுபோல வணங்கும் முறைகள், செபிக்கும் மந்திரங்கள், செய்யும் தான தருமங்களைப் பற்றியெல்லாம் கூறுகிறது.

இவை யாவும் சிறிய விஷயங்கள். இப்படித்தான் செய்யவேண்டும் என்றில்லை. ஒவ்வொருவரும் தமது வசதிக்கேற்ப இவற்றைப் பின்பற்றலாம். இதை விவேகானந்தர் பினவருமாறு கூறுகிறார்.

''சமய சாதனையின் நுட்ப இரகசியமெல்லாம் கொள்கைகளில் இல்லை; அதை அனுஷ்டிப்பதில் தான் அடங்கியிருக்கிறது. நல்லவனாக இருந்து நன்மை செய்வது தான் சமய சாதனையின் முழு உண்மையாகும். ''கடவுளே, கடவுளே' என்று அழைத்துக்கொண்டிருப்பவன் சமயச் சான்றோன் ஆகிவிட்டான். ஆனால் இறைவனின் விருப்பத்தை நிறைவேற்றுகின்றவன் தான் சான்றோன் ஆவான்''.

இதைப் பெரியபுராணமும் கூறுகிறது. பாண்டிய மன்னனின் பக்தியைவிடச் சாதாரண மனிதனான பூசலாரின் பக்தியையே சிவபெருமான் விரும்பினார்.

செம்மனச்செல்வி கொடுத்த பிட்டுக்காகச் சிவபெருமான் மண்சுமந்து பிரம்படியும் பெற்றார்.

இப்படிப் பல சம்பவங்களை நாம் புராணங்களில் இருந்து தெரிந்தெடுத்துக் கூறலாம்.

நல்லவன், யோகி, ஞானி, தவசி போன்றோரும் தாம் காரியம் செய்யுமுன் கடவுளை மனமுருகி வணங்குகிறார்கள். அது போலத் திருடனும் திருடச் செல்லும்போது கடவுளை வணங்கித் தன்னைக் காப்பாற்றும்படி மனமுருகி வேண்டிய பின்பு தான் செல்கிறான்.

தற்பொழுது மாமிசம் விற்கும் கடைகளிற் கூட இந்துத் தெய்வங்களை வைத்து அதற்குப் பூ வைத்துச் சூடமும் கொழுத்துகிறார்கள். இவையெல்லாம் தவறு என்று நன்கு தெரிந்தும் சம்பந்தப்பட்டவர்கள் மனம்கூசாமல் செய்கிறார்கள். இதற்கு மற்றவர்களால் என்ன செய்ய முடியும்? பலர் அதைப் பார்த்துச் செல்கிறார்கள். சிலர் வேதனைப்படுகிறார்கள்.

அருணகிரிநாதர் திருப்புகழைப் பாடினார். முருகனை நினைத்து அவர் பாடிய பாடல்கள் படிப்பவர்களின் நெஞ்சை உருக்கும் என்று ஞானிகள் கூறியுள்ளனர். திருப்புகழைத் தினமும் ஓதினால் முருகனின் அருளைப் பெறலாமென்று ஞானிகள் பலரும் கூறியுள்ளனர்.

திருப்புகழின் ஐந்தாவது படைவீடாகிய குன்று தோறாடல் என்ற திருப்பதி மீது பாடிய திருப்புகழ்ப்பாடல்கள் பலவற்றில் அருணகிரிநாத சுவாமிகள் கூறுவதைப் பார்ப்போம்.

“கோங்கின நீரிகை வீங்குப யோதரமும்
வாங்கிய வேல் விழியும் இருள்கூரும்
கூந்தலு நீர் வளைகொள் காந்தஹ நூலிடையும்
மாந்தளிர் போல் வடிவும் மிகநாடிப்
பூங்கொடியார் கலவி நீங்கரிதாகிமிகு
தீங்குடனே யுழலும் உயிர்வாழ்வு
பூண்டடியே னெறியில் மாண்டிங்னே நரகில்
வீழ்ந்தலையா மலருள் புரிவாயே.

கொங்கின் அரும்பும், இளநீரும் நாணுமாறு பருத்து வளர்ந்துள்ள தனங்களும், கூந்தலும், பெரிய வளையல்கள் தரித்துள்ள காந்தள் மலர்போன்ற கரங்களும், நூல் போன்ற மெல்லிய இடையும், மாந்தளிர் போன்ற மேனியும் ஆகிய

இவைகளை விரும்பி மலர்க்கொடி போன்ற பெண்ணின் சேர்க்கையை விட முடியாதவனாகி, தீமையுடனே திரிகின்ற உயிர்வாழ்க்கையைக் கொண்டு அடியேன் அத்தீ நெறியில் நின்று இறந்து, இவ்வண்ணமே நரகில் விழுந்து அலையா வண்ணம் அருள் புரிவீராக'' என்று அருணகிரிநாதர் முருகனை வேண்டுகிறார்.

திருப்புகழில் உள்ள பல பாடல்கள் விலைமாதர்களின் அங்க அழகுகளைப் பற்றியும், அவர்களது மயக்கு மொழிகளைப் பற்றியும் கூறுகின்றன. அதற்கு உதாரணமாக இத்திருப்புகழ் அமைகிறது.

''கச்சனி யிளமுலை முந்தனி பலவகை
கைச்சரி சொலிவர மயல் கூறிக்
கைப்பொருள் கவர்தருமைப்பயில் விழியினர்
கட்செவி நிகரல்குல் மடமாதர்
இச்சையி னுருகிய கச்சையனறி விலி
எச்சமி லொருபொரு ளறியேனுக்
இப்புவி மிசைகமழ் பொற்பத மலரினை
யிப் பொழு தணுகவு மருள்காராய்.

''இரவிக்கை அணிந்த இளமுலையையும், முத்தாரங்களும், பல வகையான கைவளையல்களும் ஒலி செய்ய, மயக்கத்தை விளைவிக்கும் படியான இனிய மொழிகளைக் கூறி, கைப்பெர்ருளைப் பறிக்கின்ற, மையெழுதிய கண்ணினர், பாம்பின் படம் போன்ற அல்குல்லை உடையமடமாந்தர்களின் ஆசையினால் உடலும், உள்ளமும்

உருகி அழிந்துவிட்டேன். இனிமேலும் அவ்வாறு நடவாது தேவரீரது திருவடி நிழலில் சேரத் திருவருளைத் தந்தருளும்''.

அருணகிரிநாதர் பலபெண்களோடு உறவு கொண்டவர். அவர்களது வனப்பு மிக்க உடல்கள் கொடுத்த மோகத்தில் திளைத்தவர். அதன் பின் அது தீது எனத்தெரிந்து அப்பெண்களின் உறவை விட்டவர். இருந்த போதும் அவரால் அந்நினைப்புக்களிலிருந்து மீளமுடியவில்லை. அதனால் அவர் திருப்புகழில் அடிக்கடி விலை மாதர்களின் தொடர்பை நீக்கி விடும்படி முருகனைக் கேட்கிறார்.

முகத்தைப் பிலுக்கி மெத்தமினுக்கித் தொடைத்து ரத்த
 முலைக்கச் கலிழ்த்த சைத்து முசியாதே
முழுக்கக் கழப்பியெத்தி மழுப்பிப் பொருட் பறித்து
 மொழிக்குட் படுத்தழைத்த மளிமீதே

நகைத்திட்டமுத்தி முத்த மளித்துக் களித்து மெத்த
 நயத்திற் கழுத்தி றுக்கி யணைவார்பால்
நடுக்குற் றவர்க்கு மெத்த மனத்தைப் பெருக்க வைத்து
 நயத்துத் தியக்கி நித்த மழிவேனோ

செகக்கச் செகக்க செக்க தரிக்கத் தரிக்க தக்க
 திமித்தித் திமித்தி தித்தி யெனஆடும்
செகத்துக் கொருத்தர் புத்ர நினைத்துத் துதித்த பத்த
 ஜெனத்துக் கினித்த சித்தி யருள்வோனே

மிசைத்துத் திடத்தொடுற்று அசைத்துப் பொறுத்தரக்கன்
 மிகுத்துப் பெயர்த்தெடுத்த கயிலாய
மிசைக்குற் றடுத்து மற்ற பொருப்பைபொடித்திடித்து
 மிதித்துத் துகைத்து விட்ட பெருமாளே.

முகத்தை நன்கு கழுவி மினுக்கித் துடைத்து அலங்கரித்து இரத்தின மணிமயமான தனத்தின் இரவிக்கையை அவிழ்த்து அசைத்து, சற்றும் இளைக்காமல், காலத்தைப் போக்கியும், வஞ்சித்தும், தாமதப்படுத்தியும் பொருள் பறித்து இனிய மொழி பேசிவந்தவர்களை மயக்கி அழைத்துச் சென்று படுக்கையில் இருத்தி, புன்னகை செய்து தழுவி, மகிழ்ந்து முத்தமிட்டு, மிகவும் நயமாகக் கழுத்தை அழுத்த அணைத்துக்கொள்ளும் விலைமாதர்களின் பால் வைத்த மோகத்தை, எனை ஆளும் முருகனே விலக்கிவிடு.

பழகிய பழக்கத்தை விடுவது மிகவும் சிரமமானது. பஞ்சமா பாதங்களைச் செய்த பலர் மனம் திருந்தி இறைவன் பால் அன்பு கொண்டு நல்லவற்றைச் செய்து முத்தி அடைந்துள்ளனர்.

சூரன் முருகனுடன் போர் செய்தான். கடைசி நேரத்தில் திருந்தி முருகனைத் தெய்வமாக நினைத்து வணங்கினான். அவனது செருக்குகள் அடங்கின. அதனால் சேவலும் மயிலுமாகி முருகனுடன் இருக்கிறான்.

வள்ளுவர் வரைவுஇல் மகளிரிடம் செல்லக்கூடாது என்கிறார்.

911. அன்பின் விழையார் பொருள்விழையும் ஆய்தொடியார்
இன்சொல் இழுக்குத் தரும்.

அன்பு காரணமாக ஒருவனை விரும்பாமல் அவனது பொருள் காரணமாக விரும்புகின்ற பொது மகளிர் பேசுகின்ற இனிமையான வார்த்தைகள் துன்பத்தையே கொடுக்கும்.

912. பயன்தூக்கிப் பண்புஉரைக்கும் பண்பில் மகளிர்
நயன்தூக்கி நள்ளா விடல்.

கிடைக்கக் கூடிய பொருளின் அளவுக்கு ஏற்ப இனிய வார்த்தைகளைக் கூறுகின்ற பண்பற்ற விலை மகளால் வரும் இன்பத்தை ஆராய்ந்து பார்த்து அவளுடன் சேராமல் விட வேண்டும்.

913. பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டுஅறையில்
ஏதில் பிணம்தழீஇ யற்று.

பொருளை மட்டும் விரும்பும் பொது மகளிரின் பொய்யான தழுவல், இருட்டறையில், தொடர்பில்லாத ஒரு பிணத்தைத் தழுவி கனாற் போன்றது.

919. வரைவுஇலா மாணிழையார் மென்தோள் புரையிலாப்
பூரியர்கள் ஆழும் அளறு.

ஒழுக்க நெறியிலிருந்து தவறிய பொது மகளிரின் மென்மையான தோள், அறிவில்லாத கீழ் மக்கள் ஆழ்ந்து கிடக்கின்ற நரகமாகும்.

920. இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு.

இரு வகைப்பட்ட மனமுடைய பொது மகளிரும், கள்ளும், சூதுமாகிய இம் மூன்றும், திருமகளால் நீக்கப்பட்டவர்கள் மட்டுமே உறவு கொள்வதற்கு உரியவை ஆகும்.

கள் உண்பது பாவம். கள் உண்பவன் விஷத்தை உண்கிறான் என்று வள்ளுவர் கூறுகிறார்.

923. ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால்; என்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி?

கள் உண்டு விட்டு வரும் மகனைக் கண்டால் பெற்றதாயின் முகம் வெறுப்படையும். அவ்வாறு இருக்குமானால் குற்றத்தைக் கண்டிக்கும் சான்றோரின் முகம் என்னவாகும்?.

927. உள்ஒற்றி உள்ளூர் நகைப்படுவர் எஞ்ஞான்றும்
கள்ஒற்றிக் கண்சாய் பவர்.

கள்ளை மறைந்திருந்து குடித்தாலும் அறிவு மயங்கி தன்நிலை புரியாது நடந்து கொள்வதால், அதை அறிந்து ஊர் மக்கள் எந்நாளும் இழிவாகப் பேசிச் சிரிப்பார்கள்.

930. கள்உண்ணாப் போழ்தில் களித்தானைக் காணும்கால்
உள்ளான்கொல் உண்டதன் சோர்வு.

ஒருவன் தான் கள் உண்ணாத போது கள்ளுண்டு மயங்கிக் கிடப்பவனைக் கண்டு, நானும் கள்ளுண்டால் இந்நிலைக்குத் தானே வருவேன் என்பதை எண்ணிப் பார்க்க மாட்டானோ?.

இது போல சூதாடக்கூடாது என்றும் வள்ளுவர் கூறுகிறார்.

931. வேண்டற்க வென்றிடினும் சூதினை; வென்றதூஉம்
தூண்டில்பொன் மீன்விழுங்கி யற்று.

வெற்றி கிடைத்தாலும் ஒரு போதும் சூதாடுவதை விரும்பக் கூடாது. அந்த வெற்றி தூண்டிலை இரை என்று நினைத்து மீன் விழுங்குவதைப் போன்றது.

933. உருள்ஆயம் ஓவாது கூறின் பொருளாயம்
போஒய்ப் புறமே படும்.

ஒருவன் உருளுகின்ற சூதாட்டக் கருவியை உருட்டி இடைவிடாமல் சூதாடினால், அவனுடைய பொருள் யாவும் உருண்டோடிச் சென்று பகைவரை அடையும்.

இன்னொருவருடைய மனைவியை மனதால் கூடத் தீண்டக்கூடாது என்று இந்து சமயங்கள் கூறுகின்றன. அதை மிகவும் விரிவாக வள்ளுவர் கூறுகிறார்.

பொறாமை உடையவனைக் காணப் பொறுக்காத திருமகள், தன் தமக்கைக்கு அவனைக் காட்டிவிட்டு நீங்கிச்சென்று விடுவாள்.

நல்ல வாழ்வு வாழவிரும்பும் ஒருவன் பிறரின் பொருளின் மீது ஆசை வைக்கக்கூடாது. தவறி வைத்தால், அவன் அழிந்து போவான் என்கிறார் வள்ளுவர்.

நடுவு நிலையை இல்லாமல் பிறரின் பொருளை ஒருவன் கவர நினைத்தால், அவனது குடி கெடுவதோடு குற்றமும் வந்து சேரும்.

ஒருவனது செல்வம் குறைவடையாமல் இருக்க வேண்டுமானால் அவன் பிறனுடைய கைப்பொருளை விரும்பாதிருத்தல் வேண்டும்.

ஒருவரைப் பற்றிப் புறங்கூறக்கூடாது. புறங்கூறுவோரை அறம் தண்டிக்கும் என்கிறார் வள்ளுவர்.

அறத்தை அழித்துப் பேசி தீயவற்றைச் செய்தலை விட, ஒருவன் இல்லாத இடத்தில் அவனைப் பழித்துப் பேசி நேரில் புகழ்ந்து பேசுதல் தீமையானதாகும்.

ஒருவன் எதிரே இருக்கும் போது கடுமையான வார்த்தைகளைச் சொல்லலாம். அவன் இல்லாதவிடத்துப் புறங்கூறக் கூடாது.

பிறருடைய குற்றங்களைக் காண்பதைப் போலத் தன் குற்றத்தையும் காண்பவனால், உயிர்களுக்கு வாழ்க்கையில் துன்பம் உண்டாகுமோ.?

ஒருவன் மற்றவர்களிடம் உள்ள குறைகளைப் பற்றிச் சிந்திக்கக் கூடாது. தனது குறைகள் எவையெவை என அறிந்து அவற்றைத் திருத்துதல் வேண்டும்.

தீமைகள் செய்ய அஞ்சவேண்டும். தீமைகள் தீயை விடக் கொடியவை. அவை செய்தவனை அழித்துவிடும். அத்துடன் தீயவர்களை அறமே அழிக்கும். ஒருவன் மேன்மையடைய வேண்டுமானால், அவன் யாருக்கும் தீங்கு செய்யக்கூடாது.

பிறருக்கு உதவி செய்து வாழ்பவன் தேவர்களைப் போல் மக்களால் போற்றப்படுபவன். அவன் இறந்த பின்பும் புகழ்ந்து பேசப்படுவான்.

இந்துக்கள் மாமிசம் உண்ணக்கூடாது. மாமிசம் உண்பவர்கள் தீட்சை பெறக்கூடாது. தீட்சை பெறாதவர்கள் திருநீறு அணியக்கூடாது. திருநீறு அணியாதவர்கள் பஞ்சாட்சர மந்திரத்தை ஓதுதல் கூடாது. பஞ்சாட்சர மந்திரத்தை ஓதாதவர்கள் விரதத்தை அனுஷ்டிக்க முடியாது. இப்படி இந்து சாஸ்திரம் கூறுகிறது.

புலாலை உண்டு கொண்டு மேற்சொன்ன விடயங்களைச் செய்வோர் கூடாத ஒழுக்கமுடையவர்கள்.

தனது மனமறியக் குற்றம் செய்தவன் உயர்ந்தவனாக இருந்தாலும் அவ் உயர்வால் எந்தப் பயனும் உண்டாகாது.

ஒருவரது பொருட்களை ஆசை மிகுதியால் இச்சிப்பது, அப்பொர்ருளை எடுத்த பாவத்தை உண்டுபண்ணும்.

அடுத்ததாக மனிதன் கைக்கொள்ள வேண்டியது சினத்தை அடக்கல்.

304. நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ பிற?.

முகமலர்ச்சியையும் அகமகிழ்ச்சியையும் கொல்கின்ற சினத்தை விட ஒருவனுக்குப் பகையானவை வேறு உள்ளனவோ?.

இவ்வாறு வள்ளுவர் சினத்தைப் பற்றிக் கூறுகிறார். சினத்தைப் பற்றி பகவத்கீதை இவ்வாறு சொல்கிறது.

“பொருள்களின் மீது ஆசை கொள்வதால் பற்றுண்டாகிறது. புற்று ஆசையாகப் பிணமிக்கிறது. ஆசை சினமாக வடிவெடுக்கிறது”.

“சினத்தால் மனக்குழப்பம்; மனக்குழப்பத்தால் நினைவின்மை; நினைவின்மையால் புத்தி நாசம்; புத்தி நாசத்தால் மனிதன் அழிகிறான்”

“மன அமைதியில் மனிதனது துன்பங்கள் அனைத்தும் ஒழியும். ஏனெனில் மன அமைதி உடையவனுக்கு அறிவு விரைவில் ஆத்மசொரூபத்தில் நிலைபெறுகிறது”.

மனஅமைதியின்மையால் தான் மாற்ற முடியாத பல நோய்கள் மனிதனுக்கு உண்டாகின்றன. பரபரப்பு, அவா, ஆசை, மனக்கிலேசம், சினம் முதலியவற்றால் இதயம் பாதிக்கப்பட்டு இரத்த அழுத்தமும், இரத்தத்தில் கொழுப்பும் அதிகரிக்கிறது.

மருத்துவர்களிடம் சென்றால் அவர்கள் அமைதியாக வாழச்சொல்கிறார்கள். அமைதி கடவுள் வழிபாட்டாலும் வராது. மனம் அமைதியடைய வேண்டுமானால் ஒழுக்கமான வாழ்வு வாழவேண்டும்.

மன அமைதியில்லாமல் உணவை உண்டால் அது சமிபாடடையாது. உணவு சமிபாடடையாததால் தான் நோய்கள் உண்டாகின்றன.

மனதிற்கும், உடலிற்கும் நெருங்கிய தொடர்புள்ளது. மனம் உடலைத்தன் இச்சைக்கேற்ப ஆட்டிப்படைப்பதால்

அறிவுக்கு வேலை ஏற்படுவதில்லை. இதனால் தான் உலகத்தில் தீமைகள் பலவும் நடைபெறுகின்றன.

உன்னைப் போலப் பிறரையும் நேசி.

ஒரு துன்பம் உனக்கு வந்தால் அதன் தாக்கத்தை உன்னால் தாங்கமுடியாது. அது போல உன்னால் செய்யும் தீமைகளும் உனக்குண்டான தாக்கத்தையே பிறருக்கும் கொடுக்கும் என்பதை உணர்ந்து கொள்.

இந்து தத்துவ நூல்களைப் படிப்பதாலோ, அது பற்றிப் பிரசங்கம் செய்வதாலோ பிரயோசனம் வராது. அதைக் கடைப்பிடிப்பதன் மூலம் தான் பாவங்கள் தீரும் என்பதை உணர்ந்து கொள்.

இன்று பல்வேறு பாவங்களையும் மனம் கூசாமல் செய்துவிட்டுக் கந்தசஷ்டி விரதம் அனுஷ்டிக்கிறார்கள். இதனால் எந்தப் பலனும் உண்டாகாது.

யாழ்ப்பாணத்தில் அரிசி தட்டுப்பாடு ஏற்பட்ட போது எனது நண்பர் ஒருவரிடம் இரண்டாயிரம் மூடை அரிசி இருந்தது. தட்டுப்பாடு உண்டாகுமுன் ஒரு மூடை அரிசி இரண்டாயிரம் ரூபா. தட்டுப்பாடு ஏற்பட்ட பின் ஒரு மூடை அரிசி ஏழாயிரத்து ஐந்நூறு ரூபா. அவர் தனது சகோதரர்களுக்குக் கூட அரிசி கொடுக்கவில்லை.

ஒரு மாதத்தின் பின் ஊரில் உள்ள பிள்ளையார் கோவிலில் ஐந்து மூடை அரிசி கொண்டுவந்து அவித்து அன்னதானம் செய்தார்.

அன்று இரவு அவரது வீட்டுள் திருடர்கள் புகுந்து ஒருகோடி ரூபா தருமாறு மிரட்டினார்கள். அவர்களது மிரட்டலுக்கு அஞ்சிய அவர் மறுநாள் ஒருகோடி ரூபாவை வங்கியில் எடுத்துக் கொடுத்தார்.

அரிசி தட்டுப்பாடான நேரத்தில் உரிய விலைக்கு அவர் விற்றிருந்தால் இந்த அனர்த்தம் நேர்ந்திராது.

இன்னொரு வியாபாரி தன்னிடமிருந்த அரிசியை உள்ள விலைக்குக் கொடுத்தார். அவரை இன்றும் மக்கள் புகழ்கிறார்கள்.

கடவுள் மூலப் பொருட்கள் அனைத்தையும் படைத்துள்ளார். அவற்றிலிருந்து மனிதன் தனக்குத் தேவையானவற்றை உருவாக்கிக் கொள்ளல் வேண்டும்.

கடவுள் பூமியையும் விதைகளையும், கருவிகளையும், நீரையும் படைத்துள்ளார். அவற்றிலிருந்து உணவை உற்பத்தி செய்து உண்பது மனிதனது கடமை. அது போல கடவுளும், கடவுளின் அருளைப் பெற்ற ஞானிகளும் எழுதிய நூல்களை வாசித்து அதன் படி நடக்கவேண்டியது மனிதர்களது கடமை. அதை மீறுவோரை நாம் தெருக்களில் பிச்சைக்காரனாகவும், வீட்டிலும் வைத்தியசாலையிலும் நோயாளிகளாகவும் காண்கிறோம்.

பணம், பொருள், வீடு வாசல், பிள்ளை குட்டிகள் இருந்தாலும் துன்பம். இல்லாவிட்டாலும் துன்பம்.

இந்த விசித்திரமான உலகை உணர்ந்தவன் பேரின்ப வாழ்வு வாழ்கிறான். உணராதவன் வாழும் போதே நரக வாழ்வு வாழ்கிறான். இது இயற்கையின் விதி. இதை மாற்ற முடியாது.

ஒன்றை நாம் அளவுக்கதிகமாக விரும்பினால் அதனால் பெருங்கேடு உண்டாகும். நாம் ஒருவரை ஆராயாது நம்பினால் அவரால் மரணம் கூட உண்டாகலாம். எதையும் நாம் எழுதுவதாலோ, பேசுவதாலோ பயனில்லை. அதைக் கடைப்பிடிக்க வேண்டும்.

செயலின் தன்மையை உணரவேண்டும். செய்யக்கூடாதவை எவையெவையென்று தெரியவேண்டும். அச் செயலால் உண்டாகும் நன்மை, தீமைகளையும் தெரிந்து வைத்திருத்தல் வேண்டும். இப்படியானவர்களைத் துன்பம் நெருங்காது.

“ஆசைகள் இல்லாமல் மனதையும் உடலையும் அடக்கி, உடமைகளைத் துறந்து, மற்றவர்களின் நல்வாழ்வுக்காக உடலால் கருமம் செய்பவனே இந்து” இப்படி இந்துமத நூல்கள் கூறுகின்றன. இப்படிச் சமூகத்தில் எத்தனை பேர் வாழ்கிறார்கள்?. இப்படி வாழ்பவர்கள் தான் இந்துக்கள் என்றால் அவர்களின் எண்ணிக்கை ஒரு கைப்பிடிக்குள் அடக்கிவிடலாம்.

கல்வியை எப்படிப் பெறவேண்டுமென்று இந்து நூல்கள் கூறுகின்றனர். “கல்வியைப் பணிந்தும்; பணிவிடை செய்தும், நீ அறிந்து கொள். உண்மையுணர்ந்த ஞானிகள் உனக்குக் கல்வியை உபதேசிப்பார்கள்”.

தற்போதைய மாணவர்களில் எத்தனை பேர் இப்படி நடக்கிறார்கள். ஆசிரியர்களுக்குப் பணிவிடை செய்ய மாணவர்களை அவர்களின் பெற்றோரே தற்பொழுது அனுமதிப்பதில்லை. அதனால் தான் கல்வியின் அர்த்தம் சிதைந்துள்ளது.

இது பற்றிச் சுவாமி விவேகானந்தர் கூறியதைப் பாருங்கள்.

“குருகுல முறையில் ஆசிரியரோடு நேரடியாகத் தொடர்பு கொண்டு பயிற்சி பெறுவது தான் சிறந்த கல்வி என்பது எனது கருத்து”.

“உங்கள் பல்கலைக்கழகங்களை எடுத்துக் கொள்ளுங்கள். கடந்த ஐம்பது ஆண்டுகளாக அவை எதைச் சாதிக்கின்றன. சுயமாகச் சிந்திக்கும் உண்மையான மனிதன் ஒருவனையும் அவை உண்டாக்கியதாகத் தெரியவில்லை. அவை வெறும் தேர்வுகளை நடத்தும் நிறுவனமாக மட்டுமே இயங்கிக் கொண்டிருக்கின்றன”.

“பொது நலத்திற்காக நம்மைத் தியாகம் செய்ய வேண்டும் என்ற கருத்து நம் நாட்டில் இன்னும் வளராமலேயே இருக்கிறது”

இக்கூற்றை விடச் சிறப்பாக யாரும் எதையும் கூறமுடியாது. பாடசாலைகளைப் போலவே கோயில்களும் இயங்குகின்றன. வருமானத்திற்காகப் பூசைகள் நடைபெறு - கின்றன. தற்போதைய கல்வி ஒரு ஞானியை உருவாக்கியதா...? ஒரு மேதையை உருவாக்கியதா...? சங்கரரா், இராமானுஜா், பட்டணத்தாா், அருணகிரிநாதா், வள்ளுவா், கம்பா் என்ற வரிசையில் இப்பொழுது குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவா்கள் யாா்...? இவற்றிற்குக் காரணம் இந்து சமயிகள் என்று கூறிக்கொண்டு, தாம் பின்பற்றும் சமயத்தின் அனுட்டானங்களைப் போலியாகச் செய்துகொண்டு வாழ்வது தான்.

மீண்டும் விவேகானந்தா் கூறுவதைக் கேளுங்கள்;.

“உன்னிடமுள்ள தெய்வத்தன்மை தான், ‘கடவுள் ஒருவா் இருக்கிறாா்’ என்பதற்குரிய சான்றாகும். நீ ஆத்ம சுத்தமுடையவனாக இல்லாவிட்டால் கடவுளைப் பற்றிய எந்த உண்மையும் புரிந்து கொள்ள முடியாது. நீ கடவுளாக இல்லாவிட்டால், கடவுள் என்ற ஒருவா் இருக்கவில்லை. இனி

இருக்கப்போவதுமில்லை. இந்த உண்மையே வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய இலட்சியம் என்று வேதாந்தம் சொல்கிறது. ஆத்மாவினால் சாதிக்க இயலாத காரியம் என்று எதுவும் இருப்பதாக ஒரு பொழுதும் நினைக்காதே. அப்படி நினைப்பது மதத்திற்கு மிகவும் முரண்பட்ட கருத்தாகும். பாவம் என்று ஒன்று உண்டென்றால் அது நான் பலவீனமானவன்' என்று சொல்வது தான்''

ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திலும் கடவுள் இருக்கிறார் என்று தெரிந்து கொண்டவன் அடுத்தவர்களுக்குத் தீங்கு செய்யமாட்டான். அடுத்தவர்களுக்குத் தீங்கு செய்வது கடவுளுக்குத் தீங்கு செய்வதை ஒக்கும் என்பதை அவன் அறிந்திருப்பான்.

சமயங்கள் விலக்கியவற்றைத் தெரிந்தும் அதைச் செய்பவன் தனக்குத் தானே துன்பம் செய்பவனாவான். எனவே இந்துக்கள் மதக்கடமைகள் செய்வதைப் போல வாழவும் வேண்டும். அப்படி வாழ்ந்தால் தான் அவர்கள் பிறந்த பயனை அனுபவிப்பார்கள்.


Distributed By :
LANKA BOOK DEPOT
F.L. 1.14, Dias Place,
Gunasingapura,
Colombo - 12.
Tel : 011-2-341942
PRICE : 120.00